விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii


சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (25.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜனாதிபதி மகிந்த-பிரதமர் மன்மோகன் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு

## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆலோசனை

*(நியூயோர்க்)* இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.



ஐக்கிய நாடுகள் சபையின் 66-வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட இருநாட்டு தலைவர்களும் நியூயோர்க் பெலஸ்ஹோட்டலில்சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில், எவ்வாறான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென்பது தொடர்பாக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் கலந்துரையாடினர்.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம் மற்றும் ஏனைய யுத்த வலய புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமருக்கு விளக்கமளித்துள்ளார். *(19 ஆம் பக்கம் பார்க்க)*

# 6500 முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது

## அமைச்சர் அமுனுகம தெரிவிப்பு



இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த 11 ஆயிரத்து 644 தமிழீழவிடுதலைப் புலி உறுப்பினர்களில்6 ஆயிரத்து 500 உறுப்பினர்களுக்குமறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கை மையப்படுத்தி அரசாங்கம் பாரியளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. யுத்தம் நிறைவடைந்தன் பின்னர் நாட்டில் ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் முன்னேற்றகரமாக அமைந்துள்ளது. ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகள் ஏற்கெனவே அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# ஜனாதிபதி மகிந்த மீதான குற்றச்சாட்டு ஐ.நா.விவாதிக்கும் சாத்தியமில்லை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐ.நா. சபையின் மனிதவுரிமைகள் ஆணையம் எழுப்பிய குற்றச்சாட்டுகள் பற்றி ஐ.நா. சபையின் பொதுக்குழுவில் விவாதிக்கச் சாத்தியக்கூறு இல்லை என்று ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹர்தீப் சிங்பூரி தெரிவித்தார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையம் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக மிகவும் மோசமான முறையில் தாக்குதல் நடந்திருப்பதாகவும் கடுமையான மனிதவுரிமை மீறல் நடந்திருப்பதாகவும் அறிக்கை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கை ஜனாதிபதி மகிந்தவை நேரடியாகவே குற்றம் சாட்டியிருந்தது. இதைத் தொடர்ந்து உலக நாடுகள் பல மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்திருந்தன.

ஐ.நா.சபை பொதுக்குழுக் கூட்டம் தற்போது நியூயோர்க்கில் நடைபெற்றுவருகிறது. இதில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பலர் நியூயோர்க் சென்றுள்ளனர்.

ஐ.நா. சபையின் கூட்டத்தில் இந்திய நிலைப்பாடு பற்றியும் பொதுக்குழு விவாதிக்கவுள்ள பிரச்சினைகள் பற்றியும் பத்திரிகையாளர்களுக்கு விளக்கிய ஐ.நா.சபைக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி,

ஐ.நா.சபையின் *(20 ஆம் பக்கம் பார்க்க)*

# கொள்ளையரின் வாள் வெட்டில் தாயும் மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அதிகாலை வேளை வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் வாளினைக் காட்டி நகைகளை அபகரித்துச் சென்றதோடு தாயையும் மகனையும் கூரிய ஆயுதங்களினால் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை சித்தன்கேணி நாகக்கன்னி ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் இடம் பெற்ற இச் *(19ஆம் பக்கம் பார்க்க)*

# காணிப்பதிவை நிறுத்த மன்றில் பிரேரணை வழிமொழிய கூட்டமைப்பு சபையில் இல்லை

வடக்கில் காணிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை உடன் நிறுத்தக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கொண்டு வந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிவதற்கு எவரும் முன்வராததால் அப்பிரேரணை விவாதிக்கப்படாமல் கைவிடப் பட்டுள்ளது.

வடபகுதி காணிகளை மீண்டும் பதிவுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மீள்பதிவைத் தடுத்து நிறுத்தும்படி கோரியும் பிரேரணை ஒன்றை நேற்று முன்தினம் ஒத்திவைப்புவேளையின் போது அப்பாத்துரை விநாயகமூர்த்தி கொண்டு வந்தார்.

இப்பிரேரணையை சமர்ப்பித்து அவர் உரையாற்றி முடித்த பின்னர் அவரது பிரேரணையை வழிமொழிவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் முன்வரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அப்போது சபையில் இருக்கவில்லை. இதனால் அந்தப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாமல் கைவிடப்பட்டது.

இந்நிலையில் முக்கியமானதொரு பிரேரணையை வழிமொழிவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லாது போனமை குறித்து நோக்கர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-5)

# சவேந்திரவுக்கு எதிராக நியூயோர்க்கில் வழக்குத் தாக்கல்

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்காவின் நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பல்கலைக்கழக வாஷிங்டன் சட்டக் கல்லூரியினால் நேற்று முன்தினம் இந்த வழக்குப் பதிவு செய்யப் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# After A/L?

**Government Schol.**

**CIMA-UK**
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 9 AM- 2 PM

**Engineering-USA**
Batch i : Sat & Sun 10 - 12PM
Batch II : Sat & Sun 4 - 6PM
Batch iii : Mon- Fri 8 AM -10 AM

**BIT** University of Colombo-ucsc
Batch i : Sat & Sun 8 - 12PM
Batch ii : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Fri 4.30-5.30 PM

**Multimedia_USA**
**FIT** O/L or A/L தகைமை இன்றி பல்கலைகழக அனுமதிக்கு



After A/L கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
BCS-UK, IELTS / TOEFL,CISCO-CCNA , Oracle Java, ICDL,

**MCS**
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org

Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing
Free 5 - Course fee* *Hardware *Accounting *DTP *English
5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

## வீடு வாடகைக்கு

3 அறைகளைக் கொண்ட சகல வசதிகளுடன் மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு :-
1/22, பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P :- 021 222 6569
(க-4537)

## வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL மெனேஜ்மெண்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

## AFTER A/L ...
## Management Trainee (2012 Batch)

சர்வதேச ரீதியில் இயங்கும் கனடியன் நிறுவனத்திற்கு அதன் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி கிளைகளுக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு (Management) தகுதியானவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். A/L முடித்தவர்கள் (ஆண்கள் மட்டும்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

* பயிற்சிகாலம் 3-6 மாதங்கள், பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 50000/= மேல் பெறலாம்.

(6415) தொடர்புகளுக்கு :- 0777274795, 0244907449

## உடனடி வேலைவாய்ப்பு

1. கணக்காளர்
2. விற்பனை பிரதிநிதி



Intex mobile, Sony Erricsion கைத்தொலை பேசிகளுக்கான யாழ் மாவட்ட விநியோகஸ்தர்களான அறிவொளி நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. 18 - 35 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பன்மொழிப்புலமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்களை rubantp@yahoo.com எனும் முகவரிக்கு மின் அஞ்சல் செய்யவும்.
தொடர்புகளுக்கு: அறிவொளி
27, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. T.P:- 0212220066

## கணனி விரிவுரையாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனி விரிவுரையாளர்கள் தேவை. தகுதியானவர்கள் எதிர்வரும் புதன்கிழமை 28.09.2011இற்கு முன்னர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு
0113050111
(க-4545)

## சேல்ஸ்மன் தேவை

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியிலுள்ள எமது நிறுவனத்திற்கு புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்/ பெண் பணியாளர் தேவை.
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(க-4544)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் **161** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

### செல்வி சுரேஸ்குமார் ரிஷானா

அவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி உயர்வடைய மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:- அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தை, மாமா, மச்சான், அண்ணாமார், தம்பி.
பத்தமேனி, அச்சுவேலி. (6417)

## சிவபார்வதி ஜோதிட நிலையம்



**Shivaparvathi Jhothidam**
**பண்டித்-மஞ்சுநாத சுவாமி**
**தொ.பே. இல: 077 8949044**

அன்பானவர்களே!
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களை யும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாப்லன்களையும் தெரிவிப்பார். என்ன பிரச்சினையாக இருந்தாலும் 21 நாட்களில் சாஸ்வத பரிகாரம் செய்து கொடுப்பார்.

Video Call Skype Contect: PARAMASHIVAN1

**SANJAYA HOTEL**
414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(6405) கட்டணம் ரூபா 101/-

## காணி/வீடு விற்பனைக்கு

* பளை, புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும்,
* பளை, கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும்,
* 56, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசல கூட வசதி, சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
0779592051
(6412)

## மானிப்பாயில் ......
## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினி வகுப்புக்களும் ஆரம்பம்!!

* Advanced Diploma in ICT - ADICT
* Diploma in Computer Hardware Eng.
* Computerized Accounting Packages
* Diploma in Ms Office
* Diploma in Mobile Phone Repairing
* Diploma in Desktop Publishing
* Diploma in AutoCAD

மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணம்.

சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மிகவும் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள்.

** தற்பொழுது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன !! !! **

மேலதிக விபரங்களுக்கு :-
**UNI ICT Education (Pvt) Ltd**
**Jaffna Road Manipay.**
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

## நற்செய்தியும் நன்றிகூறிய அறிவித்தலும்

## ஹொட்டேல் லக்ஸ் இற்றொய்ல்ஸ்

**இல. 34, செட்டித்தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.**

எமது நிறுவனத்தால் நல்லூர் செட்டித்தெருவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மூன்று நட்சத்திர விடுதிக்கு நிரந்தர அனுமதி பெற வகை செய்த நமது அமைச்சர், யாழ். மாநகர சபை முதல்வர், ஆணையாளர், திட்டமிடல் பகுதியினர் மற்றும் சபை உறுப்பினர்கள், யாழ், கொழும்பு நகர அபிவிருத்தி அதிகார சபை ஆணையாளர்கள், உல்லாசப்பயணத்துறை, சுற்றுச்சூழல் அதிகாரசபை ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### நற்செய்தி

1) ஐப்பசியில் திறக்கப்படவிருக்கும் நீச்சல் தடாகம். இவ்விடுதியில் தற்போதைய நிலையில் யாழ் மாவட்டத்திலேயே பெரிய அளவில் ஆரம்பிக்க விருக்கும் நீச்சல் தடாகத்தை விடுதியில் தங்கும் விருந்தினர்க்கு மட்டுமின்றி வெளியாரும் அனுபவிக்க விரும்பின் அவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வேண்டும். இவ் அங்கத்துவ உரிமை கட்டணத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு மட்டுமே என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

2) இந்நீச்சல் தடாகத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக நேரம், காலம் பிரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பயிற்சி வகுப்புக்களும் கட்டணத்தின் கீழ் வழங்கப்படும். நீச்சலின் போது காலை, மதிய, இரவு உணவுகளும் உடன் பழச்சாறுகளும் வழங்குவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்ய விரும்பியோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

*Actif Hotels & Tourism*

★★★ **Lux Etoiles**
No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna.
Tel. : 021 2223966 Fax : 021 2220606
www.luxetoiles.com
(6419)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **169** புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய எமது பேரன்

### செல்வன் இ. ஆர்த்திகன்

(யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மாணவன்)
அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஐயா
மிதுனா பாதணி
பருத்தித்துறை
(C-4542)

# ENGLISH
## The Easy Way at
## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்களுக்கு : 077 3212711
(6169)

# அதிபர்களுக்கான கூட்டம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலய கல்வி முகாமைத்துவ பிரதி கல்விப் பணிப்பாளர் கு.விஜயபால அறிவித்துள்ளார். (4-12-15)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் வித்தியாலய முதல்வர் அ. அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலக கணக்காளர் அ. கலைச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் மாணவர்களுக்கான பரிசில்களை வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியை திருமதி பிரேமிளா கலைச் செல்வன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-12)

## வடமாகாணத்தின்

# 300 நிலப்படங்களை வெளியிட நடவடிக்கை

வடமாகாணத்தின் புதிய தகவல்கள் அடங்கிய 300 நிலப்படங்களை இவ்வருட இறுதிக்குள் வெளியிட நில அளவையியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கிறது.

இந்திய நிறுவனமொன்றுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திணைக்களத்தின் தலைவர் மஹேஸ் பெர்னாண்டோ தெரிவிக்கிறார்.

சுமார் ஒன்பதாயிரம் கிலோமீற்றர் வர்க்க நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் நிலப்படத்தை தயாரிக்க விமானங்கள்மூலம் நிழற்படங்கள் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

# கட்டாயக் கல்வி குழுவின் செயலமர்வு

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுவின் வேலைத்திட்டங்கள் தொடர்பான செயலமர்வு இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட 5 தொடக்கம் 14 வரையான கட்டாயக் கல்வி வயதிற்குட்பட்ட பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக் கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்கமைய குறிப்பிட்ட பாடசாலை அதிபர்களுக்கும் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கு வலிகாமம் முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுவான பிள்ளைகளை பாடசாலைக்கு வரவழைக்கும் குழுவை அழைத்து செயற்படவைத்தல், பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு பாடசாலையில் சேர்த்தல், இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலையில் சேர்த்தல்,வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவை சீராக்கம் செய்தல் ,சமூக மட்டத்தில் விழிப்புணர்வு கூட்டங்களை (கல்வி, கலாசாரம், பண்பாடு, போசாக்கு...) நடத்துதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இச் செயலமர்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பி.கா. கஜபதி, முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா,ஆசிரிய நிலைய முகாமையாளர் த.சிவகுமாரன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (4-12)

# பொதுக்கூட்டம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி விளாத்திக்காடு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு சோதி விநாயகர் ஆலய முன்பாக இடம்பெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-12-86)

# யோகாசன வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இலவச யோகாசன வகுப்புக்கள் வெள்ளி, சனி ஆகிய கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் வாரம் தாறும் காலை 6.15 மணி முதல் 7.15 மணி வரை நடைபெற்று வருகின்றது.இவ் யோகாசன வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (4-12)

# இராசி பலன்

25.09.2011
(புரட்டாதி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 06.00 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.54 மணிவரை
மகம் முன்னிரவு 9.06 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32மணிவரை
பிரதோச விரதம்.

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், கண்ணன் வழிபாடு மகிழ்ச்சி தரும், புதிய தொழில் தொடங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வாகன சுகமுண்டு,விருந்தினர் வருகை அதிகரிக்கும், பெற்றோரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், இழுபறியாக இருந்த வழக்குகளில் வெற்றி கிடைக்கும்,கோயில் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உற்சாகமடைவீர்கள்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்,நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் கிடைக்கலாம்,உஷ்ண சம்பந்தமான ரோகமுண்டு.

**துலாம்** எதிர்கால வெற்றிக்கு திருப்பு முனையான நாள், வழிபாடுகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்,உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விரதம் வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,பணத் தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும்.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்,சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## கொலஸ்ட்ரால் குறையுமா?

"தனியாக உட்கார்ந்து எதையோ அவசரமாக சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறது போல் தெரிகிறது?"

"அடடே... உங்களைக் கவனிக்கவில்லை சேர்... வந்து உட்கார்ந்து... இந்த... திராட்சைப்பழத்தை சாப்பிடுங்கள்!" என்று கொடுத்தார்.

"எதற்கு... இது?"

"எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு கொடி இருக்கிறது சேர். அதற்குப் பந்தல் போட்டுப் படர விட்டு வைத்திருக்கிறேன்...!"

"திராட்சைப் பழச்சாறு இருதய நோய்க்குக் காரணமான கொலஸ்ட்ரால் அளவைக் குறைத்து விடும்!"

"ஆமாம்! கார்னெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கிரிசிங்கறவர் இதைக் கூறியுள்ளார். கொலஸ்ட்ராலைக் குறைக்கிற சக்தி ஒரு இரசாயனப் பொருளுக்கு உண்டு. அதற்குப் பெயர் ரெஸ்வேரெட்ரோல்! (Resveretrol) திராட்சைப் பழத்தோலில் இது இருக்கின்றது. அதனால் இது திராட்சைப் பழச் சாற்றிலேயும் இருக்கும். தொடர்ந்து சாப்பிடுகிறவர்களுக்கு இருதயநோய் அதிகமாக வருவதில்லை... "என்று கூறியுள்ளார்.

"இருதய நோயால் இறக்கிறவர்கள் எண்ணிக்கை பிரான்சிலே குறைவாக இருக்கின்றது! அதற்குக் அவர்கள் எல்லாம் சாப்பாட்டு நேரத்திலே சிவப்பு நிற ஒயினைச் சாப்பிடுகின்றது தான் காரணம்! அதையும் கார்னெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்!"

"இவ்வளவு உண்மையும் தெரிந்து வைத்துக்கொண்டுதான் இப்படி உட்கார்ந்து இதைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?"

"இதையெல்லாம்விட இன்னொரு முக்கியமான உண்மை எனக்குத் தெரிய வந்தது சேர்! அதற்குப் பின்னர்தான் அவசர அவசரமாகப் பழத்தையெல்லாம் பறித்து சாப்பிட ஆரம்பித்தேன்!"

"அது என்ன உண்மை?"

"என் பக்கத்து வீட்டுக்காரன் கொல்லைப் பக்கமாக எனக்குத் தெரியாமல் வந்து பழத்தையெல்லாம் பறித்து சாப்பிடுகின்றான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 60 |
| தக்காளி | 60 | 70 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 30 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 50 | 100 | 30 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 80 | 50 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 40 |
| கரணைக்கிழங்கு | -- | 60 | -- |
| பயற்றங்காய் | 70 | [illegible] | 70 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 45 | 15 | 40 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரி தம்புள்ளை | -- | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 8-12 | 30 | 10 |
| தேசிக்காய் | 20 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# ஐ.தே.க.வுக்கு வடக்கு கிழக்கில் ஆதரவில்லை



## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேர்மையானவர் என்றால் மஹ்றூப் முன்வைக்கும் நிதி மோசடி குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கட்டும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மஹ்றூப்பிற்கும் பதிலளிப்பதை அவர் சவாலாக ஏற்றுக் கொள்வாராயின் அதனையடுத்து எனது குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் பதிலளிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு -கிழக்கு உட்பட நாட்டில் எங்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு இல்லை என்பதை அண்மையில் நடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு முடிவுகள் அம்பலப்படுத்தின.

எனினும் அங்கு அரசாங்கத்திற்கு 30 வீத வாக்குகளை மக்கள் வழங்கியிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தலைவர் என்பவர் சவாலை ஏற்பவராக இருக்க வேண்டும். ஆனால் ரணில் விக்ரமசிங்கவோ தாம் எதிர்கொள்ள வேண்டிய சவாலுக்கு ஸ்ரீ கொத்தாவில் பணிபுரியும் அலுவலக உதவியாளரை சாட்டுகிறார்.

சவாலை ஏற்றுக் கொண்டு கட்சிக்குப் புகழ் சேர்த்த ஜே.ஆர். போன்ற தலைவர்கள் இருந்த இடத்தில் சவாலுக்குத் துணிவில்லாத தலைவராக ரணில் விக்ரமசிங்க விளங்குகிறார். அக்கட்சியின் வீழ்ச்சிக்கு அதுவே முக்கிய காரணமாகும்.

அது மட்டுமன்றி வங்கியின் நிதியை தமது உறவினர்களின் பெயரில் தேசிய சர்வதேச பங்குச் சந்தையில் அவர் விரயமாக்குவது பலர் அறியாதவிடயம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4-2)

# பேருந்துகளில் மதுப்பிரியர்கள் மக்கள் பெரும் அசௌகரியம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு நோக்கி போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில் மதுப்பிரியர்களின் தொல்லை அதிகரித்துள்ளமையால் பெரும் அசௌகரி யங்களை எதிர் நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி பகுதிகளில் பயணிக்கும் பேருந்துகளில்சிலர் மது அருந்தி விட்டும் சிலர் மது பானங்களுடனும் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இதன் போது மதுபான போத்தல்கள் பேருந்துக்குள் உடைவதால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே இவ்வாறு மது பானங்களை அருந்துபவர்களையும் மது பானங்களை வைத்துக் கொண்டு பிரயாணங்களை மேற்கொள்பவர்களையும் பேருந்துகளில் ஏற்றிச் செல்வதை தடைசெய்ய வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (4-12-64)


STUDY IN UK / POLAND

- Visa பெற்றபின் Sponcer Cash, College Cash செலுத்தும் வசதி
- 100% Visa உத்தரவாதம்
- IELTS தேவையில்லை
- இலவச ESOL Exam வகுப்புக்கள்

OCT / NOV INTAKE

மேலும்

- Canada Student Visa, Work Formit செய்து தரப்படும்.
- Poland, சைப்ரஸ், Italy Work Formit செய்து தரப்படும்.
- UK இல் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கு Post Study Work Formit செய்து தரப்படும்.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

ISC LANKA (PVT) LTD

No. 533, RASAVINTHODDAM JUNCTION, JAFFNA.

தொடர்புகளுக்கு K. RAJITHA 077 3745447

HEAD OFFICE
109 - CRISTIN ROAD
BRAVILLE
MIKT 137 BP
MILTON KEYMS, UK.

(C-4541)


# தரம் 06 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டு தமிழ், ஆங்கில மொழி மூலமான தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தரம் 6 வகுப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவிரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.(4-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**காரைநகர் பாடசாலைகளில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 16 மாணவர்களையும் மேலும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற 38 மாணவர்களையும் பாராட்டுவதோடு மென்மேலும் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்:-
காரைநகர் அபிவிருத்திச் சபையினர்,
புதுவீதி, காரைநகர்.

*யா/வலந்தலை வடக்கு அ.த.க.மி. பாடசாலை*


கி.சிந்துயன்-161


ஜெ.விதுர்சனா-158

*யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி*


அ.பிரணவரூபன்-155

*யா/ஊரி அ.மி.த.க.வித்தி*


சு.விதுர்ஸன்-181
(தீவகத்தில் 1ஆம் இடம்)

*யா/யாழ்ற்ரன் கல்லூரி- 6 மாணவர்கள்*


சு.புயலிசை-178


சி.ரகுராமன்-165


சி.காருண்யன் -155


ச.லக்ஸன்-155


செ.நாகதீபா-154


தி.திலக்ஸி-153

*யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்- 5 மாணவர்கள்*


இ.நிமல்-172


அ.யசிந்தா-165


பா.சிவதர்ஜினி-162


சோ.கிருத்திகா-158


சு.கோபிநாத்-154

*யா/மெய்கண்டான் வித்தி*


இ.ஜனனி-156

(க-4539)

விளம்பர அனுசரணை:- கஜமுகன் ஹாட்வெயர் இல:147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.





யாழ். பல்கலைக்கழகமும் கலைக் கேசரியும் இணைந்து யாழ்ப்பாண வாழ்வியல் என்னும் தொனிப் பொருளில் பொருட்காட்சியினை நேற்று கலைப்பீட வளாகத்தினுள் ஆரம்பித்து வைத்தனர். இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் பொருட்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)*

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

**கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்**

சி.தூரிகா- 167, தி.நிக்ஷிகா- 161

**கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்**

பா. சதுஷ்டிகன்- 169

**யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்**

இ.யுகோதா-165

**யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**

த. கஜலக்ஸ்ஷனன் -173, யோ. சங்கீர்த் தனசர்மா- 168, பு.தமிழினி- 155, சி.கம்சுயா- 154, ச.சமீனா- 153.

# வெளிநாட்டு சக்திகள் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன

## சவேந்திர சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

உலக நாடுகளில் எந்தவொரு நீதிமன்றமும் தனக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகைகளை மேற்கொண்டால் அதற்கு முகம் கொடுக்க தயாராகவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிட துணைப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையின் போது இவர் இலங்கை இராணுவத்தில் செயப்பட்டார். வெளிநாடுகளிலுள்ள சிலர் நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி நியூயோர்க்கிக்கான விஜயம் உத்தியோக பூர்வ முக்கியம் வாய்ந்த விஜயமாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். பலநாடுகளிடம் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதென்றும் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (4-12)

# நாட்டின் அரசியல் சாசனத்திற்கேற்ப அரசாங்கம் செயற்பட வேண்டும்

(கொழும்பு)

நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவாக அரசாங்கம் செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளை தடுக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் குறுகிய நோக்கத்திலான கொள்கைகளே சர்வதேச விசாரணை தொடர்பான பிரசாரங்களுக்கு வழிகோலியது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளின் அடிப்படையில் அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே அரசியல் சாசனத்திற்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமேயானால் சர்வதேச சமூகத்தின் தலையீடுகளை தடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடாவிட்டால் எதனையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# கடல் எல்லையை மீறும் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடல் எல்லை மீறப்படுவதால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து மீனவர்களை தெளிவுபடுத்தியதை அடுத்து இந்திய கடல் எல்லையில் கைதாகின்ற இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் வீழ்ச்சியடைந்துள்ளதாக கடற்றொழில் நீரியல் வள அமைச்சு தெரிவிக்கின்றது.

எனினும் 86 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த மீனவர்களில் 35 பேர் அடுத்த வாரத்திற்குள் நாட்டிற்கு வரவழைக்கப்படுவார்கள் என்றும் இலங்கை மீனவர்களுக்கு சொந்தமான 17 மீன்பிடி படகுகள் இன்னும் இந்திய பாதுகாப்புத் தரப்பினரின் பொறுப்பில் உள்ளதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது. (4-2)

# இந்திய இலங்கை கடற்படையினரின் இறுதிநாள் கடற்போர் ஒத்திகை



(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பின் திரு கோணமலை துறைமுக பிரதேசத்தில் இந் திய- இலங்கை கடற்படையினரின் கடற்போர் ஒத்திகை நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கையின் பாதுகாப்பு செய லாள்ர் கோத்தபாய ராஜபக்ஷவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவும் கலந்து கொண்டு போர் ஒத்திகைகளை நேரடியாக பார்வையிட்டனர்.

நேற்று முன்தினத்துடன் இப்போர் ஒத்திகை இடைநிறுத்தப்பட்டதாக ஒரு தகவல் வெளியான போதும் நேற்று முன்தினம் காலை 5 மணி முதல் மாலை 3.30 மணிவரை ஒத்திகை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது.

இந்திய - இலங்கை கடற்படையினரின் 6 கடற்படைக் கப்பல்களும் 8 அதிவேக படகுகளும் உலங்கு வானூர்தி தாங்கி கப்பல் ஒன்றும் இவ் ஒத்திகைகளில் பங்குபற்றின. (4-2)


SAMSUNG

**விரல்கள் விழிப்பை ஏற்படுத்தட்டும்**

உங்களுக்கு சிறந்த சலுகையை கொடுப்பதற்கு ஸேம்ஸங்கும் டயலொக்கும் இணைந்துள்ளது.




ஸேம்ஸங் ஹீரோ 1085 இனை கொள்வனவு செய்து இலவசமாக டயலொக் ப்ரீ பெய்ட் இணைப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்

**3 மாதங்கள்**
வரை ஒவ்வொரு மாதமும்
டயலொக்கிலிருந்து டயலொக்கிற்கு
**1000 SMS இலவசம்**

**ஸேம்ஸங் ஹீரோ 1085**

- அட்வான்ஸ் மொபைல் ட்ரெகர்
- வர்ணத்திரை
- 26 மணித்தியால FM ரேடியோ பாவனை
- 12 மணி நேரம் பேசும் வசதி
- MP3 ரிங் டோன் / வொய்ஸ் கீய் டோர்ன்ஸ்
- 40 மணித்தி... ப்ரைட் டோர்ச் பாவனை

ரூபா. 2,990/=

Next is what?
SAMSUNG mobile

## நீதிமன்ற வளாகத்தில்

# நபர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து சட்டத்தரணிகளின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

யாழ்.நீதிமன்றத்தில் வைத்து நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்குக் கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் பயணமாகவுள்ளதாக நீதித்துறை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் இன்னும் சில சாட்சிகளிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு ஒன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்.நீதிமன்றில் வைத்து கடந்த திங்கட்கிழமை சந்தேகநபர் தாக்கப்பட்டமை தொடர்பான சம்பவத்தில் பொலிஸாருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதிபதிகள் கூறியதாக சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் தாக்கி இழுத்துச் சென்ற சம்பவத்தைக் கண்டித்து சட்டத்தரணிகள் தமது வழக்காடும் பணிகளை காலவரையறையின்றி நிறுத்திப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் 4ஆவது நாளாகவும் யாழ்.மாவட்ட நீதிமன்றம், மேல்நீதிமன்றம், ஊர்காவற்றுறை, மல்லாகம்,பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களிலும் சட்டத்தரணிகள் தமது பணிகளைப் பகிஷ்கரித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகளுக்கும் நீதிபதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. வவுனியா மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதியும் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியுமான ஜே.விஸ்வநாதன், யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர், யாழ்.நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா ஆகியோர் நீதிபதிகளின் தரப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இது தொடர்பில் இன்னும் சில சாட்சிகளிடமும் சாட்சியம் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் சில சமயங்களில் இந்த விசாரணையை மேற்கொள்வதற்காக விசேட பொலிஸ் குழு ஒன்று கொழும்பிலிருந்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக நீதிபதிகள் தம்மிடம் கூறியதாக சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்தார். எனினும் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்புத் தொடரும் என்றும் அவர் கூறினார்.

(4-2)

# தேர்தல் சட்டங்களை மீறிய 71 பேர் கைதாகினர்

தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் இதுவரை 71 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 35 பேர் சட்டவிரோதமாக சுவரொட்டிகளை ஒட்டிமை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் எனவும் இதுவரை தேர்தல் சட்டங்களை மீறிய 64 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுவரையான காலப்பகுதியினுள் தமது அமைப்பிற்கு தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 59 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தலுடன் தொடர்புடைய 38 முறைப்பாடுகள் தமக்குப் பதிவாகியுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர குறிப்பிட்டார்.

(4-2)

# அடிக்கல் நாட்டுவிழா

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் 3 மாடிக்கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களான யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(4-12-29)

# யாழ்ப்பாணத்தில் 50 தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

(கொழும்பு)

வடக்கில் தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த 400 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அகழ்வாராய்ச்சித் திணைக்கள ஆணையாளர் நாயகம் டாக்டர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் 87 இடங்களும் வவுனியாவில் 110 இடங்களும் மன்னாரில் 40 இடங்களும் யாழ்ப்பாணத்தில் 50 இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் பல வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் உதவியுடன் ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியாவதற்கு முன்னதாக குறித்த தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளப்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மீள் குடியேற்றப்பட்ட சில பிரதேசங்களிலும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

(4-2)

# பொருளாதார மையத்தின் நிர்மாண பணியில் பாரிய நிதி மோசடி

(கொழும்பு)

வடக்கு மக்களை இலக்காக கொண்ட பொருளாதார மையத்தில் பாரிய நிதிமோசடி நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வடமத்திய மாகாணத்தின் எல்லைப் பகுதியில் வடக்கு மக்களை இலக்காக கொண்ட பாரிய பொருளாதாரமையம் ஒன்றை அமைக்கும் முயற்சியொன்று கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய தம்புள்ள, நஏராஹேன் பிட்டி, மீபே போன்ற பிரதேசங்களில் இயங்கி வரும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு ஒப்பான முறையில் வடக்கு மக்களின் விவ சாய உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் மையமாக பிரஸ்தாப பொருளாதார மையத்தை உருவாக்க ஆலோசிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் வவுனியாவை அண்மித்த மதவாச்சியில் அமைக்கப்பட்டு வந்த பிரஸ்தாப பொருளாதார மையத்தின் நிர்மாணப் பணிகளில் பாரிய நிதிமோசடி நடைபெற்றுள்ளமை தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அதன் நிர்மாணப் பணிகளின் கீழ் தற்போதைக்கு சுமார் இருபத்தி ஐந்து வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்ட போதும் அதன் மூலம் சுமார் ஒரு கோடியை அண்மித்த நிதி மோசடி நடைபெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் எஞ்சிய நிர்மாண பணிகளை மேற்கொள்ள இன்னும் பல கோடி ரூபாய்கள் தேவைப்படும் நிலையில் பிரஸ்தாப பொருளாதார மையத்திட்டம் கிடப்பில் போடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அரசுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருகிறது.

(4-2)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்து திருகோணமலையிலிருந்து 18 வயதுக்கு குறைந்த சிறுமியொருவரை கொழும்புக்கு அழைத்து வந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு உப முகவர் ஒருவரை எதிர்வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

மொஹமட் ஹுஸைன் மொஹமட் சுஹுர் எனும் இச்சந்தேக நபரை திருகோணமலையைச் சேர்ந்த பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மேற்படி பெண் பொலிஸாரிடம் தெரிவித்த முறைப்பாட்டில் தான் 18 வயதுக்கு குறைந்தவராக இருந்தபோதும் திருகோணமலையில் ஆடைத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்ததாகவும் அங்கு தனது நண்பர் ஒருவரால் சுஹுர் அறிமுகப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அம்முறைப்பாட்டின்படி குறித்த யுவதியின் வீட்டிற்கு சென்ற சுஹுர் யுவதிக்கு மத்திய கிழக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக தயாரிடம் கூறியுள்ளார். தனது மகளுக்கு 18 வயதாகவில்லை என்பதால் கடவுச்சீட்டு பெற முடியாது என அத்தாயார் கூறியபோது போலி பிறப்புச்சான்றிதழ் பெற்று கடவுச்சீட்டு பெறலாம் என சுஹுர் கூறியுள்ளார். இதன் மூலம் அந்த யுவதி கொழும்புக்கு அனுப்பப்பட்டார். அங்கு குறித்த யுவதியை வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார்.

பல தடவைகள் கொழும்பிலுள்ள வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அப்பெண்ணை சந்தேகநபர் அழைத்துவந்துள்ளார்.இறுதியில் தான் கர்ப்பிணியாக இருப்பதையும் உணர்ந்த யுவதி இது குறித்து தனது யாயிடம் கூறியுள்ளார். சந்தேக நபரிடம் தாயார் இது குறித்து விசாரித்து கருச்சிதைவு செய்துகொள்ள அறிவுறுத்தியதுடன் ஒரு இலட்சம் ரூபா பணம் கோரியுள்ளார். அச்செலவை தாங்கமுடியாதென்பதால் குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள தாயார் தீர்மானித்துள்ளார்.

எனினும் ஒரு இலட்சம் ரூபா பணம் தருமாறு தாயாரை அச்சுறுத்திய சந்தேக நபர் இல்லாவிட்டால் போலி பிறப்புச்சான்றிதழ் குறித்து பொலிஸாரிடம் தெரிவிக்கப்போவதாக அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் அந்நிலையங்களில் ஊழியர்கள் மற்றும் பலரிடமிருந்து தாம் வாக்குமூலங்களை பெற்றிருப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிற்கு தெரிவித்துள்ளனர்.

(4-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களிலும் மின் கம்பங்களை இடமாற்ற வேண்டிருப்பதால் காலை 8.30 மணி முதல் 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் இன்று கந்தரோடை, மாசியப்பிட்டி பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய் காரை நகர்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், குப்பிளான், மயிலங் காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பா துகாப்பு வலயப் பகுதி, மல்லாகம் தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், உடுவில், மருதனார் மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சுதுமலை, சங்குவேலி, கட்டுடை, கோண்டாவில் , காக்கைதீவு, கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம் யாழ்.பட்டணப் பகுதி ஆகிய பகுதிகளிலும் மின்தடைப்படும்.

அத்தோடு நாளை திங்கட்கிழமை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி மின் தடைப்படும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(4-2)

# கொழும்பில் 50 வீதமான வீடுகள் தரமற்ற நிலையில்

## ஐ.தே.க. வேட்பாளர் முஸம்மில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் 50 சதவீதமான வீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நிலையில் இல்லை எனவும் குறைந்த வருமானம் பெறுவோருக்காக பாரிய வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் கொழும்பு மாநகர சபைக்கான ஐ.தே.க. வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

1980 களில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச மேற்கொண்ட வீடமைப்புத் திட்டங்களைப் போன்றதாக இது இருக்கும் எனவும் முஸம்மில் கூறினார்.

அதேவேளை கொழும்பிலிருந்து எவரும் வெளியேற்றப்படமாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள வெளியேற்றும் திட்டம் காரணமாக தமது வீடுகளையும் காணிகளையும் இழக்க நேரிடுமோ என நகரில் வசிக்கும் ஏழை மக்கள் அச்சத்துடன் உள்ளனர். எந்த நிலையிலும் அதை நாம் அனுமதிக்கமாட்டோம் என அவர் தெரிவித்தார்.

(4-2)

# பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய 16 பேருக்கு அபராதம்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரைத் தாக்கியதுடன் அரசாங்க உடைமைகளுக்குச் சேதம் விளைவித்த சம்பவத்தின் குற்றவாளிகள் 16 பேருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

வடமத்திய மாகாணத்தின் மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர முன்னிலையில் சந்தேக நபர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களுக்கு தலா 40 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அபராதத் தொகையை செலுத்தத் தவறுகின்ற பட்சத்தில் சந்தேக நபர்களுக்கு தலா எட்டு மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கடந்த 2003 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் 30 ஆம் திகதி அல்லது அனை அண்மித்த தினமொன்றில் எப்பாவெல தம்கொல்ல பகுதியில் சட்டவிரோத மதுபானம் தொடர்பாக திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை இந்த சந்தேகநபர்கள் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

(4-2)

# கிளிநொச்சியில் ஒரு காணிக்கு பலர் உரிமை கோரும் நிலை

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. தற்போது காணிச்சட்டத்தின் பிரகாரம் சகல காணிகளையும் மீள்பதிவு செய்து கிராம அலுவலர்கள் ஊடாக காணி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒரு காணிக்கு உரிமை கோரி ஒன்றிற்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கும் நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பல வருடங்களாக காணிகளை கைவிட்டும் மற்றையவர்களுக்கு ஒப்படைத்துவிட்டும் வெளிநாடு மற்றும் பிறமாவட்டங்களில் வசித்து வரும் பலரும் இக்காணிகளுக்கு உரிமை கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

இதுதவிர 50 வருடங்களுக்கு மேலாக காணிகளை ஏனையவர்களுக்கு ஒப்படைத்து விட்டு எவ்வித காணி உரிமமும் கோரமாட்டோமென உறுதிப்படுத்தி காணித் திருத்தச் செலவைப் பெற்றுச் சென்றவர்களும் தற்போது காணிகளுக்கு உரிமை கோரியுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி நீதிமன்றில் காணி உரிமைப் பிரச்சினை சம்பந்தமான பல வழக்குகள் விசாரணையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(4-2)


# யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

## பரிசில் நாள்-2011

| | |
|---|---|
| காலம்:- | 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| இடம்:- | கல்லூரி அருணாசலம் மண்டபம் |
| தலைவர்:- | திரு.அ.கயிலாயபிள்ளை -கல்லூரி முதல்வர் |

முதன்மை விருந்தினர்

உயர்திரு இ.இளங்கோவன் அவர்கள்

கௌரவ ஆளுநரின் செயலாளர் (ஆளுநர் செயலகம், வடமாகாணம்)

பதில் செயலாளர் (கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

உயர்திரு கு. பிறேமகாந்தன் அவர்கள்

(கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்

திருமதி வாணி கலாபன் அவர்கள்

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம், ஐக்கிய இராச்சியக்கிளை)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-

2010ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களையும், புலமைப்பரிசில் பெறும் மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(சி-4543)


# மேற்குலக நாடுகளுடனான உறவு துண்டிக்கப்படக்கூடாது

## அனுஷ விஜயசிங்க தெரிவிப்பு

மேற்குலக நாடுகளுடன் உறவுகளைப் பேணுவது இன்றியமையாதது என சிரேஷ்ட பொருளியல் நிபுணர் அனுஷ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுடன் பொருளாதார உறவுகளைப் பேணுவதில் தவறில்லை என்றபோதிலும் மேற்குல நாடுகளுடனான உறவுகள் துண்டிக்கப்படக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய நாடுகளைப் போன்றே மேற்குலக நாடுகளும் மிகவும் அவசியமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வெளிவிவகாரக் கொள்ளைகளினால் பொருளாதார ரீதியான உறவுகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என அவர் தெரிவித்தார்.

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கே நாட்டின் 55-60 வீதமான ஏற்றுமதிகள் செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளை உதாசீனம் செய்த இலங்கையினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல் போன்ற காரணிகளினால் மேற்குலக நாடுகளுடனான பொருளாதார உறவுகளில் விரிசல் ஏற்படக்கூடிய பின்னணி உருவாகக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(4-2)

# விவசாயிகளுக்கு மானிய விலையில் றொபின் நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு றொபின் நீர் இறைக்கும் இயந்திரங்கள் 50 வீத மானிய விலையில் வழங்கப்பட இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆழமான கிணறுள்ள விவசாயிகளுக்கும் தூர இடங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவிரும்புகின்ற விவசாயிகளுக்கும் நுண் நீர்ப்பாசனம் செய்கின்ற விவசாயிகளுக்குமே பொருத்தமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நீர் இறைக்கும் இயந்திரங்கள் 200 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதால் அவ்வியந்திரத்தைப் பெறவிரும்பும் விவசாயிகள் அவ்வப் பகுதி விவசாய போதனாசிரியர்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

(4-3)




# முரண்பாட்டு குழுவுடன் பேச்சுக்கு வாய்ப்பில்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சிக்குள் முரண்பாடு கொண்ட பிரிவினருடன் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கான சாத்தியங்களை ஜே.வி.பி. நிராகதித்துள்ளது. இதற்குப் பதிலாக இப்பிரச்சினையை அடுத்து எதிர்கொள்ள வேண்டியுள்ள அரசியல் சவால்கள் குறித்து அறிவூட்டுவதற்காக அடிமட்டத்தில் விளக்கக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

அண்மையில் மொனராகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் உரையாற்றினார். கம்பஹாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உரையாற்றினார்.

அதேவேளை மாற்றுக் கருத்து கொண்டவர்களும் தமக்கு விசுவாசமானவர்களிடம் இத்தகைய விளக்கக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர்களான சமீர கொஸ்வத்த, துமிந்த நகமுவ, ரவீந்திர முதலிகே மற்றும் மத்திய குழுவிலிருந்து விலக்கப்பட்ட புபுது ஜாகொட ஆகியோர் பிரேம்குமார் குணரட்ணம் அல்லது குமார் மாத்தயா தலைமையிலான மாற்று அணி சார்பிலான பிரசாரங்களில் முன்னணியில் உள்ளனர்.

இரு பிரிவினரும் மீண்டும் இணைவதென்பது ஒரு கனவாகும் என ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத் கூறினார். அவர்களுடன் இப்போது நாம் பேசுவதற்கு என்ன இருக்கிறது என கேள்வி எழுப்பினார். அதேவேளை தலைமையுடன் முரண்பட்டுள்ள குழுவினருக்கு எதிராக என்ன நடவடிக்கை மேற்கொள்வது என இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் கூறினார். இது தொடர்பாக முரண்பாட்டு குழுவினரின் கருத்தை அறிய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. (4-2)

# கொழும்பில் திடீர் சுற்றிவளைப்பு 200 இற்கும் மேற்பட்டவர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் உள்ளிட்ட 200 இற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆறு துணை பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட 215 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த சுற்றி வளைப்பு தேடுதலை நடத்தியுள்ளனர்.

கொழும்பின் 19 பொலிஸ் வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சுற்றி வளைப்பு தேடுதலை நடத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமான 21 முச்சக்கர வண்டிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (4-2)



ஜேர்மனியைச் சேர்ந்த துவாரகா ராஜேந்திரன் தம்பதியினரின் நிதியுதவியுடன் ஊற்றுப்புலம் கிராமத்தில் கிறிஸ்தவ தேவாலயத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வணபிதா அமலதாஸ் அடிகளார் அடிக்கல் நாட்டி வைப்பதனைப் படத்தில் காணலாம்.

# லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தை அரசாங்கம் நேற்று பொறுப்பேற்றது

புத்தளம் லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் முதற்கட்ட உரிமையை சீனாவிடமிருந்து இலங்கை அரசாங்கம் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டது.

சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொறுப்பேற்பு வைபவத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் இலங்கைக்கான சீனத் தூதுவர் லக்விஜய மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணிகளை முன்னெடுத்த நிறுவனத்தின் உப தலைவர் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் முதலாவது அனல் மின் நிலையமாக கருதப்படும் இந்த மின் நிலையத்தின் ஊடாக தேசிய மின் கட்டமைப்புக்கு 300 மெகாவோட் மின்சாரம் விநியோகிக்கப் படுகின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டு இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (4-2)

# ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் சஜித்தை கட்சியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை

## சட்டத்தரணிகளை நாடுகிறார் ரணில்

(கொழும்பு)

ஐ.தே.க.வின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாசாவை கட்சியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் பின் பெரும்பாலும் ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரில் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஐ.தே.க.விலிருந்து வெளியேற்றப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

அதற்கான சட்ட ஆலோசனைகளைப் பெறும் நோக்கில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிரேஷ்ட சட்டத்தரணிகளின் உதவியை நாடியுள்ளார்.

ஐ.தே.க.வைப் பலவீனப்படுத்தி இரண்டாக பிளவுபடுத்தும் அரசாங்கத்தின் நோக்கத்துடன் இசைந்து செல்லும் சஜித் பிரேமதாச பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருவது பரவலாகப் பேசப்படும் விடயமாகும். (4-2)

# அமெரிக்காவுக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ள-ஷிராந்தி ராஜபக்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாரியார் அமெரிக்காவில் உல்லாச சுற்றுலாக்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றுவதற்கென அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குழுவில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவும் இடம்பெற்றுள்ளார்.

அவ்வாறான நிலையில் அவர் தனது பாதுகாப்புக்கென இலங்கையிலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட பெண் இராணுவத்தினரை அழைத்துச் சென்றுள்ளார்.

அவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்காவின், ஸ்வேடன் ஐலண்ட் எனுமிடத்தில் அமைந்துள்ள விலையுயர்ந்த உணவகமொன்றுக்கு அவர் தன் பரிவாரத்துடன் உணவருந்தச் சென்றுள்ளார்.

அப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான இலங்கையர் வசிக்கின்ற போதிலும் அவர்களில் ஒருவரைக் கூட ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ சந்திக்கவோ அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவோ இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அமெரிக்காவின் முக்கிய வர்த்தக நிலையங்கள் அனைத்திலும் ஷிராந்தி ராஜபக்ஷ குழுவினர் உல்லாச சுற்றுலாக்களை மேற்கொண்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. (4-2)

# அதிகளவான மதுபானசாலைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அதிகளவான மதுபானசாலைகளுக்கு அனுமதி அளித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போதைக்கு முற்றுப்புள்ளி என்னும் அரசாங்கத்தின் பிரதான கோட்பாட்டுக்கு புறம்பான வகையில் நாட்டின் மதுபானசாலைகளின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் 36 மதுபானசாலைக்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும் கடந்த 2010 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 51 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுற்றுலாச்சபைக்கு சொந்தமான விடுதிகளுக்கு மட்டுமே மதுபானசாலை அனுமதிகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஆறு மதுபானசாலைகளுக்கும் கிளிநொச்சி மற்றும் திருகோணமலையில் தலா ஒரு மதுபானசாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் 4.2 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)


உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

திருமுருகன்கொம்நெற் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

650/= ரூபாவிலிருந்துகுறைக்கப்பட்டுள்ளது.

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

Hot line :- 0212227835




(வி/4528)

# மற்றொரு கோணம்

## உங்கள் உணர்வுகள் வலிமையாகவும் சமநிலையாகவும் அமையின் வாழ்வின் உணர்வுநிலை மிக அற்புதமாக இருக்கும்

வேலை பார்க்கும் இடத்தில் எனக்கு நிறையப்பிரச்சினைகள். என்மீதுதான் தவறு என்று சிலரும், என்னைச்சுற்றி இருப்பவர்கள் மேல் தவறு என்று சிலரும் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களில் பல பேர், வேலை பார்க்கின்ற இடத்தில்தான் கூடுதல் நேரம் செலவழிக்கிறீர்கள். எனவே, குடும்ப உறுப்பினர்களுடன் இருக்கின்ற உறவு போலவே வேலை பார்க்கிற இடத்தில் உள்ளவர்களுடனான உறவு மிகவும் முக்கியம். வாழ்க்கையின் முக்கியமான அங்கம் தான், உங்கள் வேலை. உங்களுக்கு முக்கியமானவர், முக்கியமில்லாதவர் என்று நீங்கள் தரம் பிரிக்கின்ற போதுதான் அந்த மனிதரால் உங்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது.

புரிந்து கொள்வதன் அடிப்படையில் உறவுகள் உருவாக வேண்டுமே தவிர ஒருவரை ஒருவர் சாமர்த்தியமாகப்பயன்படுத்திக் கொள்வது எப்படி என்றுபார்க்கக் கூடாது. அதன் மூலம் மற்றவர்கள் மேல் நீங்கள் ஆதிக்கம் செலுத்த முற்படுவீர்கள். இதை யாருமே விரும்பமாட்டார்கள்.

சிக்கலுக்கு யார் காரணம் என்பதைவிட உங்கள் தன்மை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். உங்கள் உடல், மனம், உணர்ச்சி, சக்தி நிலை ஆகியவை மகிழ்வான தன்மையில் இருக்கும் போது உறவு முறைகளில் பிரச்சினை இருக்காது.

நான் ஏதாவதொரு ஒரு டாக்சியில் ஏறினால், வண்டிகிளம்பி சிறிது நேரத்திலேயே அதன் ஓட்டுநர் தன் மொத்த வாழ்க்கையையும் என்னோடு பகிர்ந்து கொள்ளும் அளவு உரையாடலில் நெருங்கிவிடுவார். காரணம் நான் ஒரு இடத்தைச் சென்றடைவதற்கு அவரை ஒரு கருவியாகக் கருதாமல், எனக்குத் தருகிற அதே இடத்தை அவருக்கும் தருகிறேன்.

நீங்கள் மிகவும் நேசிக்கிற மனிதருடன் மொத்த நேரத்தையும் செலவிட்டால் மகிழ்சியாக உணர்வீர்கள். அது நடைமுறையில் சாத்தியம் இல்லை. எனவே நீங்கள் தொடர்பு கொள்கிற ஒவ்வெரு மனிதரையும் முழுமையாக நேசியுங்கள் உங்கள் வாழ்க்கை மகத்தான மாற்றத்துக்குள்ளாவதை உணர்வீர்கள்.

இந்த வாழ்க்கைக்கு ஆன்மீகம் அவசியமா?

உங்களிடமுள்ள இருதயம், நுரையீரல், கிட்னி ஆகியவற்றால் நீங்கள் நீங்களாக இல்லை. உங்கள் உடம்பினால் மட்டும் நீங்கள் நீங்களாக இருக்க முடியாது. உங்கள் எலும்புகள் தசைக்குவியல்களினால் நீங்கள் நீங்களாக இல்லை. உங்கள் உயிர்தான் உங்களை நீங்களாக உருவாக்கியிருக்கிறது. எனவே எதை வைத்து ஒருவர் ஆன்மீக வாதியாக இல்லையா என்று கூற முடியும்? எல்லோருமே ஆன்மீகத்தில்தான் இருக்கிறார்கள் ஏனென்றால் எல்லோருக்குமே உயிர் இருக்கிறது. இப்போதைய கேள்வி இதுதான், சிலர் தங்களுடைய உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள்.

உடல் நிலையில் ஆராக்கியமாக இருப்பவர்கள். பொருளியல் சார்ந்த உலகியல் வாழ்வில் சிறந்து விளங்குவார்கள். ஒரு மனிதன் ஆராக்கியமாக இருந்தால், பேரூந்தில் ஏறவேண்டும் என்றால் ஓடிச்சென்று ஏறிவிடுவான்.

மனிநிலை சிறப்பாக இருந்தால், மனம் சம்பந்தமான காரியங்களை கடந்து செல்வீர்கள். உங்களுக்கு நிலையற்ற மனம் இருந்தால், மனதளவில் துன்புறுவீர்கள். உங்கள் உணர்வுகள் வலிமையாக, சமநிலையில் இருந்தால், வாழ்வின் உணர்வு நிலைகளை அற்புதமாக உணர்வீர்கள். அதாவது நீங்கள் முழுமையான சமநிலையில் இருந்து கொண்டே ஒவ்வொரு உணர்வுகளில் உங்களை முழுமையாக ஈடுபடுத்தி எல்லாவற்றையும் அனுபவித்து உணர முடியும். அதே போல் உங்கள் சக்தி முறையாக இருந்தால், நீங்கள் வாழ்வில் வேறொரு பரிமாணத்திற்கு செல்ல முடியும். இவையெல்லாம் இல்லாவிட்டால், நீங்கள் எதுவும் இல்லாதவர்கள் போல்தான்.

ஆன்மீகவாதிக்கும், லௌகீகவாதிக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்று மனிதர்கள் தொடர்ந்து கேட்கின்றனர். உண்மையில் அப்படி ஒரு வகையான மனிதர்கள் கிடையாது. உடல், மனம், சக்தி ஆகிய அனைத்தும் ஒன்றுதான். யாராலும் இதைப்பிரிக்க முடியாது.

துப்பாக்கியால் சுட்டால்தான் இதைப் பிரிக்க முடியும். அல்லது ஒருவர் விழிப்புணர்வில் வளர்ந்தால் இதனைப் பிரிக்கலாம். அது வேறு விடயம். எந்த ஒருவராலும் நூறு வீதம் லௌகீகத்திலோ அல்லது ஆன்மீக்த்திலோ இருக்க முடியாது.



சாகும் தறுவாயில் உங்கள் வாழ்வை

### ஆன்மீகம் 51

சிறிது திரும்பிப் பார்த்தால், நீங்கள் செய்தவைகள் எல்லாம் குழப்பமான நிலையில் பிழைப்பிற்காகச் செய்ததாக உள்ளது. அதிலும் அப்படிச் செய்தவையெல்லாம் உயிரோடிருப்பதற்குத் தேவையானவை மட்டுமே.

வெறுமனே உயிரோடு இருப்பதற்கான முற்சியில் மனிதனுக்கு நேர்ந்துள்ள அவலம் அளவற்றது. பெரும்பாலான மக்கள், வயது ஏறஏற மனதளவில் அதிகம் காயப்படுகின்றனர். பெரும் வேதனை கொள்கின்றனர். வயதாக வயதாக அவர்களுக் ஞானம் அதிகரிக்க வில்லை. அதற்கு மாறாக அவர்களின் மனக்காயம் தான் அதிகரிக்கிறது.

"நீங்கள் யார்"என்பதை நிர்ணயிப்பதாக இருந்தால், உங்கள் வாழ்க்கை பயனற்ற ஒன்றாகிவிடும். நீங்கள் யார் என்பது ஆனந்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், இவைகள் எல்லாவற்றையும் நீங்கள் வைத்துக் கொள்ளலாம். (முற்றும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தமிழே தாயே என் உயிர்மூச்சே

### கணினி யுனிக்கோட (Unicode) தமிழ்மொழியில் ஏற்படுத்திய தாக்கங்கள் 05

**3.10 ஸ்ரீ யின் அடிப்படை ஶ**

ஸ்ரீயானது தமிழ் மொழியில் பரவலாகப் பாவிக்கப்படினும் இது சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழிற்கு உள்வாங்கப்பட்டதாகும். மேலும் ஸ்ரீ ஆனது ஓர் எழுத்தோ அல்லது 'க்ஷ' போல் ஒரு கூட்டெழுத்தோ அன்று. இது ஒரு சொல்லாகும். ஸ்ரீ சொல்லானது ஶ அடிப்படையாகக் கொண்டு உருவானது. ஶஎழுத்தானது தமிழர் மத்தியிலே இன்று பரிச்சயம் இல்லாவிடினும் இவ்வெழுத்துத் தமிழினால் உள்வாங்கப்பட்டதொன்றாகும். தமிழ் அகராதியியலில் அரிய சொத்தான தமிழ் Lexicon எனின் ஆறாம் தொகுதியில் நூற்றுக்கணக்கானஶ என்பதை அடிப்படையாகக் கொண்ட சொற்களை காணலாம்.

**4.0 முடிவுரை**

கணினி யுனிக்கோட் கடந்த தசாப்தத்தில் தமிழ் மொழியில் ஏற்படுத்திய தாக்கங்களை தொகுத்து நிரற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். இக்கட்டுரையில் அனைத்துத் தாக்கங்களும் நிரல் படுத்தப்படாமல் இருக்கலாம். மேலும் வருங்காலங்களில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படலாம். (முற்றும்)

கணினி விரிவுரையாளர்
ஞா. பாலச்சந்திரன்

### கவிதை 01

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கவிதை"

முத்தென்பார் உன்னை
முழுநிலவின் ஒளி பிழிந்த
சத்தென்பார் உன்னை
முத்தமிழ் குடி விதைத்த
வித்தென்பார்உன்னை
கத்து திரைகடல் பிறக்கும்
முன் பிறந்த கனகமணிக்
கொத்தென்பார் உன்னை
தித்திக்கும் தேனமைந்த
திகட்டாத அமுதமெனும்
சொத்தென்பார் உன்னை
எத்திக்கும் ஒளி பரப்பும்
எழிலார்ந்த புகழ் வாய்ந்த
சித்தென்பார் உன்னை
அத்தனை பெருமைகளும்
அடுக்கடுக்காய் கொண்டுள்ள
முத்தமிழே! தாயே!
முத்தமிழே! உனைப்பணிந்தேன்
செந்தமிழ், தண்தமிழ் தேனார் தமிழ்
தென்தமிழ், வண்தமிழ், திருநெறிய தமிழ்
இன்தமிழ், ஒண்தமிழ், இசை மலிதமிழ்
இருந்தமிழ், வியந்தமிழ், இணை யில் முத்தமிழ்
சந்த மின்தமிழ், சந்து லாந்தமிழ்
சந்த மாந்தழ காய தண்தமிழ்
பந்த மார்தமிழ்,பாரி னார்தமிழ்
பலமிகுந்தோர் பண்பட்ட செந் தமிழ்
இன் புறுந்தமிழ், இணையில் செந் தமிழ்
இன்ன றுந்தமிழ், எல்லை இல் தமிழ்
ஏழிசைத்தமிழ், எழிலிசைத்தமிழ்
என்றுமுள்ளதாம் இனிய செந்தமிழ்
தேமரு தமிழ், தேக்குறு தமிழ்
தேமதுரத் தமிழ்
தென்னன் தமிழ், தெய்வத்தமிழ்
சீர்மன்னு செந் தமிழ்
பூந்தமிழ், இருந்தமிழ், பொய்யாத் தமிழ்
நறுந்தமிழ், நற்றமிழ், நல்லிசைத் தமிழ்
முத்தமிழ், முதுதமிழ், முடிவில் இன்தமிழ்
கலைமலி தமிழ், கலை வளர் தமிழ்,
கலை செழி தமிழ், கவின் தமிழ்
குலமார் தமிழ், குன்றாத்தமிழ், குற்றமில்
செந்தமிழ்
பொங்குதமிழ், புகழ் தங்கு தமிழ், என்றும்
பொய்யாப் பெருந் தமிழ்
பரவுந் தமிழ், பணியாத் தமிழ்,
பாரினோர் புகழ் பலவுமாந்தமிழ் என்றின்ன
வாறாக
எங்கள் புலவர்களால்- இமயக் குன்றன்ன
மொழியென்று
குதூகலிக்கப்பட்ட தமிழ் -எங்கள் இதயத்து
உயிர் மூச்சாய்
இலங்குகின்ற தமிழ் மொழியே!
உன்னை நினையாது
உலகத்தில் ஒரு தமிழன் உள் ளானோ
அவன் என்ன உயிர்ப்பிறப்போ
வாய் திறந்து நீ முதலில்
மழலையென வார்த்தைகளைத்
தாய் மகிழத் தந்த தமிழ் -உன்
தாய் பிறந்து மழலை மொழி
தாய் மகிழத்தந்த மொழி-உன்
தந்தைக்கும் தந்தை அவர் தந்தை
தந்தைக்கும் தந்தை, அவர் தந்தை
தந்தையென தம் உணர்வை...
இந்தத் தரணியிலே
இனிமையாய் தந்த தமிழ்-உன்
அன்னைக்கும் அன்னை அவர் அன்னை
அன்னைக்கும் அன்னை, அவர் அன்னை
அன்னையெனத் தம் உணர்வை...
முன் நாளில் புலப்படுத்த
முழுமையாய் வாய்த்த தமிழ்
முத்தான முத்தமிழ்
வித்தாரமான பல
விந்தைக் கவிதைகளைச்
சொத்தாகக் கொண்ட தமிழ்
யுகம் பல கண்ட தமிழ்
வள்ளுவனை, இளங்கோவை
வளமான புலவர்களை வைய கத்திற்
களித்திட்ட
வற்றாத ஊற்றுத் தமிழ்
கம்பனை, பாரதியை
கவி ஒட்டக்கூத்தனென
நம் புலவர் கூட்டத்தை
நல்கியதோர் நறுந்தமிழ்
சங்கப்புலவர்களை, சமயப்புலவர்களை
தமிழ்ப்புலவர்களாய் தரணிக்குத் தந்த தமிழ்
ஒல்காப் புகழ் மிக்க
தொல்காப் பியத்தையும்
பல்காப் பியங்களையும்
பலருக்குத் தந்ததமிழ்

(தொடரும்)

கவிஞர் அகளங்கன்

# மத்திய வங்கிக்கு 3 புதிய ஆளுநர்கள்



From left: Dr. Weerasignhe, Mr. Silva and Mrs. C Premaratne

நிதி அமைச்சின் சம்மதத்துடன் நாணயச் சபையானது உதவி ஆளுநர்களான கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க மற்றும் பி.டி.டபிள்யூ.சில்வா ஆகியோரை இம்மாதம் 27-ம் திகதியில் இருந்தும் திருமதி சி.பிரேமரத்தன 2012ஜனவரி 01-ம் திகதியிலிருந்தும் துணை ஆளுநர்களாக பதவி உயர்த்தியுள்ளது.

கலாநிதி பி.நந்தலால் வீரசிங்க மத்திய வங்கியில் குறிப்பாக பொருளாதார ஆராய்ச்சித் துறையில் 20 ஆண்டுகளுக்கும் கூடுதலான அனுபவத்தைக் கொண்டுள்ளவர்.

தற்போது இவர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பூட்டான் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி வாஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றுகிறார். அவர் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டிற்கு பொறுப்பான உதவி ஆளுநர் பதவியினையும் வகித்திருக்கிறார்.

இலங்கை மத்திய வங்கியில் 28 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிவரும் பீ.டி.டபிள்யூ.ஏ.சில்வா நிதியியல் முறைமை உறுதிப்பாடு, விலை உறுதிப்பாடு, நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கை, வெளிநாட்டு வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் பணவீக்கம் போன்ற துறைகளில் பரந்த அனுபவ அறிவைக் கொண்டுள்ளவர்.

இந்நியமனத்திற்கு முன்னர் அவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராகவும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் உதவி ஆளுநராகவும் பதவி வகித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியிருக்கும் திருமதி சி.பிரேமரத்தன, பொருளாதார ஆராய்ச்சி, பொதுகடன் முகாமைத்துவம், நாணயம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

இந்நியமனத்திற்கு முன்னர் அவர் நாணயம் மற்றும் கொள்கை மீளாய்வு கண்காணிப்புத் திணைக்களம் என்பவற்றுக்குப் பொறுப்பான உதவி ஆளுநராகப் பதவி வகித்துள்ளார்.

மேலும் சர்வதேச முதலீட்டு வங்கி, தரமிடல் தூதுக்குழுக்கள் மற்றும் இருபக்க கடன் வழங்குவோர் ஆகியோரை இணைப்பதிலும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் பெரும் பங்காற்றினார்.




# அதிவேக இணைய சேவையான ஐ-சிறிலங்காவை

## யாழில் அறிமுகப்படுத்தியுள்ள சிறிலங்கா ரெலிகொம்

ஒருங்கிணைக்கப்பட்ட தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களில் நாட்டில் முன்னணி வகிக்கும், முன்னணி அகன்ற அலைவரிசை மற்றும் உட்கட்டமைப்பு சேவை வழங்குநராக விளங்கும் சிறிலங்கா ரெலிகொம் கடந்த வாரம் தனது தீவிரமான அதிவேக அகன்ற அலைவரிசைவலையமைப்பினை தேசிய அளவிலான வலையமைப்பு நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமான ஐ-சிறிலங்காவின் ஊடாக அறிமுகப்படுத்தியது.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா ரெலிகொம் பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம் மற்றும் பராமரிப்பு நிலையம் என்பன திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டமாக இது காணப்படுகின்றது.

ஐ-சிறிலங்கா வலையமைப்பு நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமானது, தற்போதைய செப்புகம்பி அடிப்படையிலான பிரவேச வலையமைப்பினை ஃபைபர் ஒப்டிக்ஸ் மூலம் புதுப்பித்து, நாடெங்கிலும் அகன்ற அலைவரிசை பிரவேசத்தில் புரட்சியினை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக வாடிக்கையாளர் தொடர்ச்சியான, தடையற்ற அதிவேக இணைய சேவைகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

செக்கன் ஒன்றுக்கு 20மெகாபைட்ஸ் (mbps) அதற்கு மேற்பட்ட வேகத்தில் இணைய சேவைகளை வாடிக்கையாளர்கள் அனுபவிக்க முடியும்.

ஐ-சிறிலங்கா என்ற இந்த செயற்திட்டத்தின் ஊடாக SLT மெகாலைன் வாடிக்கையாளர் களுக்கு உயர்ந்த தரத்திலான குரல், தொடர்ச்சியான, தடையற்ற அதிவேக இணையம் மற்றும் நாடெங்கிலும் தொலைக்காட்சி வசதிகள் எனபவற்றை வழங்குவதற்கான வலையமைப்பை விரிவாக்குவதுடன் மேம்படுத்தும் தனியார் வர்த்தக வலையமைப்பு, பொழுபோக்கு, தொலைக்கல்வி, இணையக்கல்வி, இ-சுகாதாரம் மற்றும் மேலும் பலவற்றை அதிவேகத்தில், உயர்தரத்தில் மற்றும் நம்பகத் தன்மையுடன் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த தளத்தையும் அது வழங்கும்.

முழுமையான புதிய பரிமாணத்துடன் காட்சி, பொழுதுபோக்கு சேவையை பரந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு வழங்குவதன் ஊடாக ஐ-சிறிலங்கா SLT இன் PEOTV சேவைகளுக்கும் பிரவேசத்தை வழங்குகின்றது.

தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியும்பலாப்பிட்டிய இந்த வைபவத்தில் உரையாற்றும்போது, சிறிலங்கா ரெலிகொம் ஐ-சிறிலங்கா திட்டம் முன்னேற்றகரமான தகவல் தொழில்நுட்ப சேவைகள் மூலம் வழங்கி[illegible]ம் உயர்தர சேவையானது [illegible] ஆண்டளவில் ஏற்றுமதிகள் [illegible] ஒரு பில்லியன் டொலர்களுக் மேற்பட்ட தொகையை நாடு பெற்றுக்கொள்ள வழி வகுக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள சகல கிராமங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

இதன் மூலம் முழு நாடும் சர்வதேச சமூகத்துடன் உடனடித் தொடர்புகளை ஏற்படுத்த வழிபிறக்கும் என்று குறிப்பிட்டார்.

**ஐ-சிறிலங்கா செயற்திட்டம் பற்றி...**

SLT வாடிக்கையாளர்களை இணைக்கும் சிறிலங்கா ரெலிகொமின் தற்போதைய பொருத்தப்பட்ட வலையமைப்பு சேவைகளை பரவலாக்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் 2010ஆம் ஆண்டின் இறுதியில் ஐ-சிறிலங்கா செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

FTTN மூலம், குறுகிய தூரங்களில் MSAN இனின் உபாய ரீதியான பொருத்தல்கள் மூலம் செப்புக் கம்பி வயர்களின் இணைப்பு தூரத்தை குறைத்து நம்பகத் தன்மை, தரம் மற்றும் அகன்ற அலைவரிசை தரவு வேகத்தை அதிகரித்து ஃபைபர் வலையமைப்பினை வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாக பரவலாக்குவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் தீவிர அதிவேக அகன்ற அலைவரிசை இணைப்பினை, 2 வருடங்களுக்கும் அதிகமாக பொருத்தப்பட்ட வாடிக்கையாளர்களாக உள்ளவர்களுக்கு 20mbps வரை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

**சிறீலங்கா ரெலிகொம் பற்றி...**

சிறிலங்கா ரெலிகொமின் வருபாந்த சந்தைப் புரள்வு ரூ.50 பில்லியனுக்கும் அதிகமாகும். கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் 2010-ம் அண்டு டிசம்பர் 31-ம் திகதியின் போதான சந்தை மூலதனம் ரூ.88 பில்லியனாகும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6870.92 | 6734.60 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6209.24 | 6023.93 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,837.99 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ஏசியன் அலைன்ஸ்(201.50), றீஜன்ஸ் (304.30), ரேடியன் ஜெம்ஸ்(192.50), ஜெஸ்ணர்(427.40), கென்வீனியன்ஸ் பூட்(358.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஈஸ்ரன் மேர்ஷன்ட்(29.10), கலமஷு (2511.00), எச்ஏவி பூட்ஸ்(50.00), குருவிட்ட ரெக்ஸ்ரைல்ஸ்(27.90), ஈஸ்ட் வெஸ்ட்(34.90).

மேலதிக தகவல்கள்:, www.cse.lk

## ஒவ்வொரு நண்பனும் தேவைமச்சான்...



ஏர்டெல் லங்கா நிறுவனம் தமது நிறுவனத்தின் விளம்பரமான ஒவ்வொரு நண்பனும் தேவை மச்சான்... என்ற பிரபல தீம் பாடலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக காட்சிப்படுத்தும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.49 | 111.13 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 167.94 | 171.83 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.15 | 151.18 |
| சுவிஸ் பிராங் | 119.84 | 123.75 |
| கனேடிய டொலர் | 105.94 | 109.12 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.22 | 109.74 |
| சிங்கப்பூர் டொலர் | 83.49 | 85.88 |
| ஜப்பான் யென் | 1.42 | 1.46 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.22 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.02 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




NDB குழுமம் முதலீட்டு வங்கித்துறையில் வினைத்திறன் மிக்க உடன்பாட்டினை எட்டும் வகையில் சிங்கப்பூர் DBS வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடக NDB குழுமமும் DBS வங்கியும் உரிமைமுதல் மற்றும் வருமான வழங்கல்கள், ஒருங்கு சேர்வமைப்பு, செயற்றிட்டக் கடன்கள், ஒன்றிணைவு மற்றும் கையகப்படுத்தல் போன்ற விடயங்களில் இன்றாக இணைந்து செயற்படும்.

சிங்கப்பூரின் மிகப்பெரும் வங்கியும் முன்னணி நிதிச் சேவைகள் குழுமமுமான DBS வங்கியுடனான கூட்டானது இலங் கையின் முதன்மை முதலீட்டு வங்கியான NDB இன் நடவடிக்கைகளை வலுப்படுத்தும் என்றும் நாட்டின் பொருளாதாரத்தின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியானது, அடுத்து வரும் சில வருடங்களுக்குள் கொடுக்கல் வாங்கல்களின் அளவினை பேரளவில் அதிகரிக்கும் என NDB வங்கியின் தலைவர் ஹேமக்க அமரசூரிய தெரிவித்தார்.


# பொருளாதார வளர்ச்சியில் இந்தியா

## ஜப்பானை முந்துகிறது



எதிர்வரும் 2013-2014-ம் ஆண்டில் உலகப் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா, ஜப்பானை மிஞ்சிவிடும் என ஆய்வறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள தகவலில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் நிலைவரப்படி உலகப் பொருளாதாரத்தில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

இதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தித் திறனின் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளதே காரணம். இந்நிலையில் கிரிசில் என்ற பொருளாதார ஆய்வமைப்பின் தலைவரும் பொருளாதார நிபுணருமான சுனில் சிங்ஹ கூறியதாவது,



கடந்த நவம்பரில் ஜப்பான், சீனா, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா உலகப் பொருளாதாரத்தில் நான்காவது இடத்தில் இருந்தது. தற்போது இந்திய பொருளாதாரம் 7 முதல் 8 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது எனினும் கடந்த மார்ச் மாதம் நிகழ்ந்த சுனாமி தாக்குதலால் அதன் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது. இதன்மூலம் வரும் 2013-14ஆம் ஆண்டில் இந்தியா, ஜப்பானை மிஞ்சி விடும் இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையினரால் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட வித்தகபுரம் நவக்கிரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 பயனாளிகளிற்கு வாழ்வாதாரத்திற்காக தலா 5 ஆயிரம் வீதம் சுயமுயற்சிக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி மங்கல விளக்கேற்றுவதையும் அபிவிருத்திக்கடன் உத்தியோகத்தர் பொ. காந்தரூபன் பயனாளி ஒருவருக்கு கடன் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கிளாலி எழுதுமட்டுவாழ் மேற்கு பகுதியில் மீள்குடியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிளாலி கிராம சேவகர் பிரிவிற்கான மீள்குடியேற்றத்தில் நாளை திங்கட்கிழமை கிளாலி எழுதுமட்டுவாழ் வீதிக்கு மேற்குப் புறமாக உள்ள பகுதிகளுக்கு மட்டுமே மீள்குடியேற அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பகுதிக்கான மீள்குடியேற்றம் தவிர்க்க முடியாத காரணத்தால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் ஏனைய பகுதிகளிற்கான மீள்குடியேற்றத் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் தெரிவித்துள்ளார். (4-12)

# கிறிஸ்மஸ் தீவுக்கு அகதிகளுடன் சென்ற இருபடகுகள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ்தீவுக்கு புகலிடம் கோருவோருடன் சென்ற இரு படகுகள் இடைநடுவில் நேற்று முன்தினம் இரவு தடுத்து நிறுத் தப்பட்டுள்ளன. தடுத்து நிறுத்தப் பட்ட படகுகளில் ஒரு படகில் 66 பேர் பயணித்துள்ளனர். இப்படகு கிறிஸ்மஸ் தீவிலிருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சர்வதேசக் கடலிலும் 60 பேருடன் பயணித்த மற்றைய படகு அவுஸ்திரேலியா வின் வடமேற்கு தீவிலும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குடியகல்வின் சட்ட திருத்தத்தை எதிர்க்கட்சியினர் தடுத்தால் அது கடத்தல்காரர்களுக்கு சாதகமாக அமைவதுடன் அகதிகள் மேலும் அவுஸ்திரேலியாவின் கரையை வந்தடைய உதவுமெனவும் இதன் பொறுப்புக்களை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்பதுடன் கரையோரத் தடுப்பு நிலையங்களை விஸ்தரிக்க வேண்டிய பொறுப்பையும் எதிர்க்கட்சித் தலைவர் அபோட்டே ஏற்க வேண்டும் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகதிகளை அனுப்புவதற்கு மலேசியா பாதுகாப்பான நாடு அல்ல எனவும் குடியகல்வு சட்டத்திருத்தத்தை கடைசி வரை எதிர்க்க போவதாகவும் அபோட்டே வலியுறுத்தியுள்ளார்.

நாவுறு தீவு ஐ.நா அகதிகள் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு என்பதால் அகதிகளை நாவுறு என்ற தீவுக்கு அனுப்பலாம் என்பது எதிர்க்கட்சியின் நிலைப்பாடாகும். (4-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011





★ 1513-ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்போ நூனியெத்தே பால்வோவா பசுபிக் பெருங் கடலை முதன் முதலில் கண்ட ஐரோப்பியர்.

★ 1690-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப்பத்திரிகை முதலும் கடைசித் தடவையாகவும் வெளிவந்தது. இது அரசினால் தடை செய்யப்பட்டது.

★ 1789-அமெரிக்கக் காங்கிரஸ் அரசியலமைப்பிற்கு மனித உரிமைகளுக்கான 10 திருத்தங்கள் உட்பட 12 திருத்தங்களைக் கொண்டு வந்தது.

★ 1906-கரையிலிருந்து படகை வழி நடத்தும் முறை ஸ்பெயினில் இயக்கிக் காட்டப்பட்டது. இதுவே தொலை இயக்கியின் பிறப்பு எனக் கருதப்படுகின்றது.

★ 1956-அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித் திட்டம் நிறுவப்பட்டது.

★ 1959-இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்தபிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து மறுநாள் இறந்தார்.

★ 1962-அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1983-வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.

**பிறப்புக்கள்**

★ 1897-வில்லியம் ஃபோக்னர், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1962)

★ 1968-வில் ஸ்மித், அமெரிக்க ராப் இசைப் பாடகர்

★ 1976-சான்சி பிலிபஸ், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1978-ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை (பி.1923)

★ 1986-நிக்கலாய் செமியோனொவ், ரஷ்ய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1896)

★ 2003-எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத்துறை அறிஞர்(பி.1935)



★ 1899- தமிழ் திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் உடுமலை நாராயணகவியரின் ஜனனதினம் (இ.1981)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தானம் செய்

சொட்டுச் சொட்டாய்
எம்மை உருக்கி
சாகும் உயிருக்கு
உயிர் கொடுப்போம்

நாம் சாதி மதம் எதுவுமின்றி– எம்
இரத்தத்தை வழங்கி
சகோதரர்களாவோம்

சாகும் நிலையில் இருப்பவர்களை
மனித நேயப் பண்பால் உயிர் காப்போம்
மரணவாசலில் இருப்பவருக்கு– நாம்
இரத்தம் வழங்கி ·
மரணத்திற்கு அடி கொடுப்போம்

எவ்வேளை எப்போதும்– நாம்
உயிர்காக்க விழித்திருப்போம்
இலவசமாய் சுரக்கும் இரத்தத்தை
இன்பமாய் தானம் செய்வோம்

எட்மன் அன்ரனி றெக்ஸ்மன்
புனித பத்திரிசியார் கல்லூரி

### நட்பு பிரியும் தருணம்

காலையில் பூத்து
மாலையில் மடியும்
பூக்களுக்குக்கூட
ஒருநாள்தான் மரணம்...
ஆனால் –உயிரில் கலந்து
ஒன்றாய் பேசி
ஒன்றாய்ப் பழகி
ஒன்றாய்க்கூடி
மகிழ்ந்த நட்பு
பிரிகின்ற தருணம்
வருகின்ற போது
பிரிவுக்கு விடை சொல்ல
முடியாமல்
கண்ணீருடன் பிரிகின்ற
கணங்கள் ஒவ்வொன்றும்
மரணம்தான்...

செ.ரவிசாந்

### நல்வாழ்வுக்காய்...

கல்விக்கு அறிவு தேவை
நற்பண்புக்கு ஒழுக்கம் தேவை
உறவுக்கு ஒற்றுமை தேவை
உயர்வுக்கு முயற்சி தேவை
பேச்சுக்கு இன்சொல் தேவை
நல் நட்புக்கு உதவுதல் தேவை
செல்வத்திற்கு நல்லறம் தேவை
மகளிருக்கு அடக்கம் தேவை
ஆடவருக்கு வீரம், விவேகம் தேவை
பெரியாருக்கு பொறுமை தேவை
நல்வாழ்க்கைக்கு வாய்மை தேவை

த.சுதர்சினி
நாயன்மார்க்கட்டு

### அவரவர் பார்வையில்

மலைகள்
ஏராளமான நாட்கள் ஆகிவிட்டது
மலைகள் குளித்து
பள்ளத்தாக்கில் தங்கி நிற்கும்
தண்ணீரில் முகம் பார்த்து
அழுகின்றன–மலைகள்
ஆயுள்
கால் வைத்தால்
முகம் வரை நனைக்கும்
கடலலைகள்
பாவம் என் குழந்தைகளின்
மணற்கரையில் கட்டிய
சிறுகுடிசை
சீதனம்
கால் விரல்கள் விரதம் இருந்தது
மெட்டி அணியும் கனவும் இருந்தது
மாப்பிள்ளைக்குக் கொடுக்க
சீர்வரிசை தானில்லை

செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு-12

பிரிவு
கண்ணீரை பேச வைக்கும்
கொடிய செயல்!
மௌனம்
அவனுக்கு மட்டும் தெரிந்த
அர்த்தமுள்ள பாசை
காதல்
கண்களால் புகுந்து இதயத்தை
குடையும் வண்டு

செ.கிரிஷாந்தி
கந்தரோடை

### நினைவுகளுடன்

முடியவில்லை
என்மீது அன்பு கொண்ட
உறவுகளுக்காய்
பல தடவைகள்
புன்னகைக்க முயற்சிக்கின்றேன்
ஆனாலும் முடியவில்லை
என் புன்னகையை ரசிப்பதற்கு
அனுதினமும் ஆசை கொள்ளும்
என் அன்புத் தந்தை– இன்று
என் எதிரில்
புகைப்படத்தில் மட்டுமே
புன்னகைத்துக் கொண்டிருப்பதால்

நா.துஷி
வள்ளிபுனம்

### ஒரு ஓவியம்

நான் ஒரு ஓவியத்தை
வரைந்து விட்டு
அதையே பார்த்துக் கொண்டிருக்க
அது ஒரு காவியத்தை
எடுத்துக் கூறியது
அது காதல் காவியம் அல்ல
முள்ளிவாய்க்காலில்
எமது உறவுகள்
இரத்தச் சிலுவை சுமந்த
காவியம்

உயிரோவியன்

### இமயம் தொட...

முகங்களுக்கும்
ஆடைகளுக்கும்
மதிப்பளிப்பதை விட
நல் மனங்களுக்கு
மதிப்பைக் கொடு
இயல்புகளை மாற்றுவதை விட
இயலாமைகளை மாற்ற முயல்
குடிசையில் வாழ்பவனும்
கோபுரத்தில் வாழ்பவனும்
இறுதியில் ஒருபிடி சாம்பலே

மாவை நா.கஜேந்திரன்


### அக்காவுக்கு அன்பு மடல்



பச்சைவயல் நீலக்கடல்
நெடுவன்பனை
அழகான முல்லைநகர்
காலையில்
கிளிகளும் குக்குறுவான்களும்
எங்கள் மாந்தோப்பு
வந்து போகும்
மிதிவண்டியில்
அக்காவோடு தம்பியும்
ஒன்றாய்
பள்ளிக்குச் செல்வோம்
மாலையிலே
கடற்கரையில்
பந்தடித்து
உவகை கொள்வோம்
ஆசை அக்காவுக்கு
எழுதிய கடிதம்...
எல்லாம்
ஞாபகப் பூக்களாய்
சோக நினைவுகளாய்

அ. முல்லை திவ்யன்

## மௌனத்தின் தேடல் – 89



### நம்பிக்கை

பெற்றபிள்ளை
சோறு போட மறுத்த போதும்
நான் செய்த தொழில்
என்னை இன்றுவரை
கைவிடவில்லை
என் உயிர் உள்ளவரை
உழைத்தே வாழ்வேன்
இப் பூமிதனில்!

நூபி விமலதாஸ், நவாலி.

### இதுதான் விதியா?

வாட்டி வதைக்கும்–இக்
கொடிய வெயிலில்
வயிற்றுப் பிழைப்பை நாடி
ஒரு ஜீவன்!

கி.சுபாஜினி
குமரன்புலம், மூளாய்.

### மனிதனின் ஏக்கம்

ஏன் இந்த பிறப்பு
ஏன் இந்த வாழ்வு
உயிர்வாழ இப்படியா
துன்பப்படவேண்டும்
ஏழைக்கு மட்டும்
ஏன் இந்த கொடூர நிலை

பி.மொறீஸ் டில்கான்
ஓ.ஐ.எம்.குருமடம்

### மகத்துவம்

அன்று உதிரத்தை பாலாக்கி–என்
வயிற்றுப் பசி தீர்த்தாள்
இன்று உதிரத்தை வியர்வையாக்கி–என்
கல்விப் பசி போக்குகிறாள்
தாய்மையின் மகத்துவமதை
அறிவீரா மாந்தர்களே

என்.துஷி
சிறுவர் இல்லம்

### விடியுமா?

பொழுது புலர்ந்த
பின்னும்
வறுமையிருள்
நீக்கும் என
வசந்த சூரியனை
தேடுகிறேன்
என் வாழ்வில்

வா.ஜெயபிரசன்னா
யா/ஹாட்லிக் கல்லூரி

### உயர்வு

சொத்திழந்து சுகமிழந்து
சொந்தங்களை இழந்து
சுதந்திரத்தினையும் இழந்திடினும்
சோற்றுக்கு கையேந்தாது
சொந்தக் காலுன்றி நிற்கும்
செந்தமிழ்த் தாயே
உன் போன்றோர் உள்ளவரை
உயர்வு பெறும் நம் இனம்

யாழ்நிலா
யாழ்ப்பாணம்

### உன்னததாய்

கால் வயிறு கஞ்சிக்கு –கால்கடுக்க
வெயிலில் நின்று – உழைத்து
உண்ண நினைக்கும்
உன்னத தாய் இவள்

யோ.சுதாகரன்
மானிப்பாய்

### பசிபோக்க

மானத்தோடு வாழும்
தாயொருத்தி தனியாக
சுட்டெரிக்கும் வெயிலில்
கச்சான் விற்கிறாள்
பணம் சேர்க்க அல்ல
தன் வயிற்றுப் பசிபோக்க

துரை
தென் மட்டுவில்

### விழும்வரை!

ஒய்வு பெறும்முதுமை வறுமையால்
உழைப்பிற்கு முதன்மை
விழுந்திடும் நாள்வரை
விரைந்திடுமோ? இவர் தொழில்...!

பெ. சங்கவி,
யாழ்ப்பாணம்.

### வசந்தம்

கொளுத்தும் வெயிலிலும்
தளராது கச்சான் விற்பவளே
ஒருநாள் வீசும் நம்பக்கம்
கச்சான் காற்று

த.நிதாகரன்
குடத்தனை

### வாழ்வின் பாடம்

வாழ்க்கைச் சக்கரத்தின்
கடைசி அத்தியாயத்தை– நீ
வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என
பொருள் வாங்க வரும்
வாலிபத்துக்கும்
கற்பித்து விடு தாயே

வி.ஸிந்தா
வடகோப்பாய்

### உழைப்பு

முதுமையை காரணம் காட்டி
மூலையில் முடங்காமல்
இளமையில் பகடு காட்டி–திரியும்
மூளையில்லா முட்டாள்களுக்கு
உன் உழைப்பு ஒரு பாடமம்மா

நெய்தல்
தேன்மொழி

### சிறந்த முயற்சி

அடுத்தவரில்
தங்கி வாழாது
சொந்த உழைப்பில்
வாழ நினைக்கும்
உந்தன் முயற்சி
சிறந்தது தான்

மா.செழியன்
வேலணை -03

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 90

**அன்பு வாசகர்களே !**




உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 30.09.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# வல்லிபுர ஆழ்வாருக்கு நாளை கொடியேற்றம்



(மருதங்கேணி)


ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெண்ணைத் திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழா நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கிட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை சமுத்திர தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை கேணி தீர்த்தமும் நடைபெறும்.

அத்தோடு பகல் உற்சவம் காலை 8 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 4.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. (4-12-35)

# முஸ்லிம்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



முஸ்லிம் மக்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாழ் முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்படுவார்கள் என மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் பொய்யானவை.

முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட எவரும் கொழும்பிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள். மாறாக நகரத்தினரும் மக்களினதும் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பத்தாயிரம் கோடி ரூபா செலவில் சேரி மக்களுக்கு 35 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளதுடன் இதில் ஒரு வீட்டுக்காக 30 இலட்ச ரூபா செலவிடப்படவுள்ளது.

சேரி வாழ்க்கை என்ற எண்ணக்கருவினை முற்றுமுழுதாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (4-2)

# மாலபே மருத்துவ கல்லூரிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்வு

(கொழும்பு)

மாலபேயில் அமைந்துள்ள மருத்துவ கல்லூரிக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு இன்று ஞாயிற்றுக்கிழமை கூடவுள்ளது.

180 மருத்துவர்கள் இச்சங்கத்தின் செயற்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். சுகாதார அமைச்சு நியமித்துள்ள ஐந்து அங்கத்தவர் குழு அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் வெளியிடும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் உபுல் குணசேகர கூறினார்.

அதுவரையில் புதிய மாணவர்களை அங்கு சேர்க்க வேண்டாம் என ஆலோசனை கூறப்பட்டுள்ளதாக இவர் தெரிவித்தார்.

கண்டியிலும் பத்திரமுல்லையிலும் வேறு 21 இடங்களிலும் தனியார் மருத்துவ கல்லூரிகளை அமைக்கப் போவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கூறியுள்ளதாக டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்தார். (4-2)

# கொள்ளைச் சம்பவங்கள் நாடுமுழுவதும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளிடம் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இதுவரை காலமும் கொழும்பு மற்றும் ஹிக்கடுவை பிரதேசங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்த பிரஸ்தாப கொள்ளைச் சம்பவங்கள் தற்போது நாடு முழுவதும் பரவலாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அதன் காரணமாக பாரிய பாதிப்புக்குள்ளாவதாக சுற்றுலாத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறான நிலையில் அண்மையில் சிகிரியா பிரதேச ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் சிலரின் பணம் உட்பட உடைமைகளைத் திருடியதாக கூறப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பாக கைதான சந்தேக நபர் கெக்கிராவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. (4-2)

## வடக்கு மார்காணத்தின்

# கல்விப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

வடமாகாண கல்வி நிலை தொடர்பான உண்மைத் தன்மையினை ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்காக வடமாகாணத்தைச் சேர்ந்த வலய கல்விப் பணிப்பாளர்களுடன் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

இதில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

அத்தீர்மானங்கள் வருமாறு,

ஆசிரியர்களது சுய விபரக்கோவை நிறைவு செய்யப்படாமை, அக்ரகார காப்புறுதி, சம்பள உயர்வு, பதவி உயர்வு பெறுவோரில் தடைகள் உள்ள ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பிப்பதுடன் தங்கள் பிரச்சினை தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையில் உள்ள படிவத்தினை (படிவம்-1) பூரணப்படுத்தி அதன் பிரதியினை மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சுயவிபரக்கோவையினை பூரணப்படுத்தாமல் சேவையை விட்டு இடை விலகியவர்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னரும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் சுய விபரக்கோவையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும் பூரணப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் வலயத்தில் உள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட்ட சுய விபரக் கோவைகளின் எண்ணிக்கை, பூரணப்படுத்தப்படாமல் உள்ள சுயவிபரக் கோவைகளின் எண்ணிக்கை அவற்றைப் பூரணப்படுத்த எடுக்கும் காலம் ஆகிய விடயங்கள்(படிவம்-2) உடன் அனுப்பி வைக்க வேண்டும்.

ஓய்வூதிய வயதை அடைந்துள்ள ஆசிரியர்களது ஓய்வூதியம் தொடர்பான நடவடிக்கைகள் வலயக் கல்வி பணிமனையினால் மேற்கொள்ளப்படாதவிடத்து அவ்வாசிரியர்கள் பிரச்சினைகளை தங்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதுவதுடன் அதன் பிரதியினை மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

2008,2009 காலப்பகுதியில் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சா/த , க.பொ.த உ/த பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் தங்கள் பெயர், சுட்டெண், பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை, தோற்றிய பாடங்கள் தொடர்பான விபரங்களை எழுதி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புவதோடு அதன் பிரதியினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

இதில் கடந்த 5 வருட காலப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதிகளை அதிபர் கோருமிடத்து இலவசமாக வழங்க பரீட்சை ஆணையாளர் உறுதி வழங்கியிருந்தார். இதுவரை இவ்வாறு பரீட்சைப் பெறுபேறுகளை பெறாத அதிபர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்வதோடு அதன் பிரதிகளை வலயக் கல்வி அலுவலகம், மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மாணவர் விடுகைப் பத்திரத்தை இழந்த மாணவர்கள் மீள விடுகைப் பத்திரத்தின் பிரதியினைக் கோரி பாடசாலைக்கு வருகை தரும் பொழுது , அதனை வழங்குவதற்கான முறைமை பாடசாலை அதிபர்களுக்கு அறிவுத்தப்பட்டுள்ளது. அதன்படி விடுகைப் பத்திரங்களை அதிபர்கள் வழங்க வேண்டும்.

சேவையின் போது இறந்த அரச ஊழியர்களது சம்பளம் அவர்களது பின் உரித்தாளர்களுக்கு கிடைக்காமல் யாரும் இருப்பின் அவர்கள் உடனடியாக தங்கள் விபரங்களுடன் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரை சந்திப்பதோடு விபரங்களை மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அறியத்தர வேண்டும் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

எனவே இது விடயத்தில் உரியவர்களை கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார். (4-12)

# கௌரவிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக தேசிய சேமிப்பு வங்கியின் சிமைல் சேமிப்பு கணக்கை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடந்த 6 மாத காலத்திலும் சிறப்பாகத் தொழிற்பட்ட சங்கரத்தை உப தபாலக உப அஞ்சல் அதிபர் எஸ்.ரி.நந்தகுமார் கௌரவிக்கப்படுகிறார்.

இவருக்கான கௌரவிப்பு பரிசிலை இவ்வார இறுதியில் கொழும்பில் நடைபெறும் கௌரவிப்பு விழாவில் அஞ்சல்மா அதிபர் வழங்கி வைக்கவுள்ளார். (4-5)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளி எனக் கண்டு தலா 8 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# ஒரிசா மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு

## 600 கிராமங்கள் வெள்ளத்தில்

(புவனேஸ்வர்)

ஒரிசா மாநிலத்தில் உள்ள நான்கு முக்கிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் 600 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஒரிசா மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள பிராமணி, பாய்டாராணி, புதாபாலாங், சுபர்ணரேகா உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஜாஜ்பூர், கியோன்ஜிகா, பாக்ராக், கேத்திராபாரா, பாலாசோர், மாயூர்பியாஜ் உள்ளிட்ட மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

பாய்டாராணி ஆற்றின் குறுக்கே சாதிபூரில் கட்டப்பட்டுள்ள 120 ஆண்டுகள் பழமையான பாலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் ஜாஜ்பூர் மாவட்டம் மாநிலத்தின் மற்ற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. பானிகோய்லி முதல் கியோன்ஜிகார், ஜாசிபூர், காமாக்சியா நகர் உள்ளிட்ட பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலைகள் சேதமடைந்துள்ளன. போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆற்றில் கரையோரங்களில் உள்ள 600 க்கும் மேற்பட்ட கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

ஒரிசா முதல்வர் நவீன் பட்சாயக் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பான குடிநீர், நடமாடும் மருத் துவ வசதிகள் உள்ளிட்டவை அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நக்சல் வேட்டை க்கு பயன்படுத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. (4-2)

# தற்கொலை முயற்சி குற்றமல்லவென சட்டத்திருத்தம் கொண்டுவர முயற்சி

## 25 மாநிலங்கள் ஒப்புதல்

(புதுடில்லி)


தற்கொலை முயற்சி குற்றமல்ல என்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர 25 மாநிலங்கள் ஒப்புதல் அளித்துள்ளன. இருப்பினும் இது குறித்து சட்டத் திருத்தம் அமுலாக ஓராண்டுக்கு மேலாகும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கஷ்டங்கள் காரணமாக தற்கொலைக்கு முயற்சிப்பவரை கைது செய்து சிறையில் அடைப்பது அவருக்கு மேலும் ஒரு துன்பத்தை கொடுப்பதாக தான் அமையும். எனவே தற்கொலைக்கு முயற்சிப்பதை குற்றமாக கருதக்கூடாது என சட்டக் கமிஷன் கடந்த 2008 இல் பரிந்துரை செய்திருந்தது.

சட்ட கமிஷன் இந்த பரிந்துரை குறித்து கருத்து தெரிவிக்கும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய உள்துறை அமைச்சகம் கடிதம் அனுப்பியது. பீகார் மத்திய பிரதேசம் உள்ளிட்ட நான்கு மாநிலங்களவை தவிர்த்து மற்ற அனைத்து மாநிலங்களும் தற்கொலை முயற்சியை குற்றமாகக் கருதக் கூடாது என கருத்து தெரிவித்துள்ளன.

மனநல பாதுகாப்பு மையத்தை சேர்ந்த தன்னார்வலர் தற்கொலை முயற்சி குற்றம் என்ற சட்டத்தை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனக்கோரி டில்லி உயர் மனு நீதிமன்றில் மனு செய்திருந்தார். இது குறித்து விளக்கம் அளிக்கும் படி உயர் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்தது. (4-2)

# பாரதச் செய்திகள்

# பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சருடன் கிருஸ்ணா சந்திப்பு



(புதுடில்லி)

ஐ.நா. சபை கூட்டம் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில்நடைபெறுகிறது. அதன் ஒரு பகுதியாக சார்க் நாடுகளின் வெளியுறவுதுறை மந்திரிகள் கூட்டம் நேற்று நடந்தது. இதில் ஐ.நா. சபை கூட்டத்தில் பங்கேற்க பிரதமர் மன்மோகன்சிங்குடன் சென்றுள்ள வெளியுறவு மந்திரி எஸ்.எம். கிருஷ்ணா கலந்து கொண்டார்.

அப்போது அவர் பாகிஸ்தான் வெளியுறவு பெண் மந்திரி ஹீனாரப்பானியை சந்தித்து பேசினார். அப்போது பாகிஸ்தானில் ஏற் பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார். (4-2)

# கனிமொழிக்கு பிணை பெறுவது குறித்து சோனியாவை சந்தித்தாரா டி.ஆர்.பாலு?

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(சென்னை)

உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டி, ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிதம்பரத்தின் மீது குற்றச்சாட்டு என்ற பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தூதர் டி.ஆர். பாலு சந்தித்து பேசவுள்ளார்.

மரியாதை நிமித்தமான வழக்கமான சந்திப்புதான் என்று கூறப்பட்டாலும் கனி மொழிக்கு பிணை பெறும் நோக்கில் தீவிரமாக தி.மு.க. இறங்கியுள்ள நிலையில் சோனியாவை கருணாநிதியின் தூதர் சந்தித்து இருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது.

இந்த சூழ்நிலையில் தான், முக்கிய கூட்டணிக் கட்சியான தி.மு.க வின் பாராளுமன்றக் கட்சித்தலைவர் டி.ஆர்.பாலுவுடன் சோனியாவின் சந்திப்பு நிகழ்ந்துள்ளது. விசேடம் ஒன்றுமில்லை. சோனியாவை சந்தித்துவிட்டு வந்த டி.ஆர். பாலுவை தொடர்பு கொண்டு கேட்ட போது இது வழக்கமான மரியாதை நிமித்தமான சந்திப்பு மட்டுமே. வேறு எந்த முக்கியத்துவமும் இல்லை.

சோனியாவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு அவருக்கு அறுவை சிகிச்சை நடந்திருப்பது அனைவரும் அறிந்ததே. மத்தியில் ஆளும் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் அவர் பரிபூரண குணமடைவதற்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் தி.மு.க. தலைவர் கரு ணாநிதி ஏற்கனவே செய்தி அனுப்பியிருந்தார்

மற்றபடி வேறு எந்த விசேடமும் இந்த சந்திப்பில் இல்லை என்று மட்டும் தெரிவித்தார்.

உடல் நலக் குறைவுக்கு பின் முழு ஓய்வில் இருந்து வரும் சோனியா இதுவரை சொந்தக் கட்சியின் மூத்த முக்கிய தலைவர்களைக் கூட சந்திக்கவில்லை. இந்நிலையில் கூட்டணிக் கட்சியான தி.மு.க வின் பிரதிநிதியை சந்தித்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனிமொழிக்கு பிணை பெறுவது 2 ஜி வழக்கு மத்திய அமைச்சர் சிதம்பரத்தை நோக்கி திரும்பியுள்ளது போன்ற காரணங்களால் சந்திப்பு நடந்து இருக்கலாம் என டில்லி வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. (4-2)

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 1000 மெஹாவோட் மின் உற்பத்தி

அணுமின் நிலைய விவகாரம் தொடர்பாக பிரதமரின் முடிவே இறுதியானது என நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் டில்லி திரும்பியதும் இறுதி முடிவு எடுப்பார் என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

நாராயணசாமி நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது, கூடங் குளம் அணு மின் நிலையம் விமானம் மோதினால் கூட சேதம் ஏற்படாத அளவுக்கு 4 அடுக்கு பாதுகாப்புடன் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் முதல் கட்டமாக 1000 மெகாவாட் மின் உற்பத்தி விரைவில் தொடங்கும் நிலையில் உள்ளதாகவும் இதில் 900 மெஹாவோட் மின்சாரம் தமிழகத்துக்கே பயன்படுத்தப்படும் எனவும் கூறினார்.

இப்போதுள்ள சூழ்நிலையில் தண்ணீர் நிலக்கரி மூலம் மின்சாரம் உற்பத்தி குறைந்து வருகிறது. பல நாடுகளில் அணுமின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுகின்றன. நான் கூடங்குளம் சென்று மக்களுடன் பேசிய விபரங்களை வெளிநாட்டு பயணத்தில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தொலைபேசியில் கூறினேன். பிரதமர் 27 ஆம் திகதி டில்லி வந்த பின் பிரச்சினையை நேரில் சந்தித்து விளக்குவேன்.

இந்த பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் பிரதமருடன் தொலைபேசியில் பேசியுள்ளார் என்றும் சர்வகட்சி குழுவினர் பிரதமரை சந்திப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர்களும் பிரதமரை சந்தித்து நிலைமையை விளக்குவார்கள். அதன் பின் இந்த விவகாரத்தில் பிரதமர் மன்மோகன்சிங் இறுதி முடிவு எடுப்பார் என்று பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி கூறினார். (4-2)



திருச்சி மேற்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க சார்பில் போட்டியிடும் நேருவுக்காக தேர்தல் நடத்தும் அலுவலரும் திருச்சி ஆர்.டி.ஓவுமான சம்பத்திடம் முன்னாள் துணைமுதல்வர் ஸ்டாலின் வேட்புமனு தாக்கல் செய்தார். அருகில் முன்னாள் அமைச்சர் செல்வராஜ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநகர தலைவர் ஹாசிம், சட்டத்தரணி பாஸ்கரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்

# உலக நாடுகள் தங்களது நிதிகளை வளரும் நாடுகளில் வைப்பிலிடவேண்டும்


உலக நாடுகள் தங்களது உபரி நிதிகளை வளரும் நாடுகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முதலீடு செய்ய வேண்டும் என்று இந்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்துள்ளார்.

வளர்ச்சி நடவடிக்கைகள் இன்னும் பரந்த அளவில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர் வளரும் நாடுகளில் வளர்ச்சி நடவடிக்கைகளை வலுப்படுத்துவது அதில் முதன்மையானது எ[illegible]ப்பிட்டுள்ளார்.


பிரணாப் மேலும் கூற[illegible]யது, உலகிலுள்ள பெரும்பாலான வளரும் நாடுகள் மிக வேகமாக வளரும் திறனை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மோசமான உட்கட்டமைப்பு வசதிகளால் ஒரு அளவுக்கு மேல் அவற்றால் வளர்ச்சியடைய முடிய வில்லை.

யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் அவற்றைக் கையாளுவதற்கான கொள்கைகள் உள்ளிட்டவை ஜி-20 நாடுகளின் விதிமுறைகளில் இடம்பெற வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று ஏதாவது ஒருவகையில் தொடர்பு கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் இதைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்றார். (4-2)

# அருள்மிகு அல்வாய் மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் சிறப்பு மலர் - 25.09.2011



## கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி



*வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்*

எனும் கூற்றுக்கமைய மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையாரை குல தெய்வமாகக் கொண்டு சைவ ஆகம கிரியைகளை சிறப்புற செய்து வருகின்ற நான் இப்பூவுலகில் காணுதற்குரிய கும்பாபிஷேகத்தையும் எனது திருக்கரங்களினால் நிறைவேற்றியதையிட்டு நான் பெற்ற பாக்கியமாகக் கொண்டு தொடர்ந்து டிண்டலாபிஷேகம் நடைபெற்று மண்டலப் பூர்த்தியை காணுகின்ற இத்திருநாளிலே எல்லா மக்களுக்கும் கும்பாபிஷேகத்தின் பலன் கிடைக்க வேண்டுமென்று விநாயகப் பெருமானை வணங்கி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


சர்வே யனாஹா சுகினோ பவந்து

நா.திவாகரக் குருக்கள்,

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி

அம்பாள் தேவஸ்தானம்.

## பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ். மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் அல்வையம்பதி கிராமத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் எமது மூதாதையர் மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தார்கள். மடாலயமாக இருந்ததை புனரமைப்புச் செய்து 1994ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறியது.

இதன் தொடர்பாக பதின்மூன்று வருடத்தின் பின் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. மக்களினதும் அயலவர்களின் உதவியுடனும் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு சிறப்பெய்தியது. வெளிநாட்டில் உள்ள எமது உறவுகள், நண்பர்கள் நிதியை அள்ளித் தந்தார்கள். இந்நிதியைக் கொண்டு திருப்பணி திருப்திகரமாக நிறைவெய்தியது. மூலமூர்த்தி முருகன், மஹாலக்சுமி, வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவாரமூர்த்திகளும் கொடித்தம்பமும் மூஷிகபலிபீடம், வசந்த மண்டபம், மணிமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், தேவர்சபை, வர்ண வேலைப்பாடுகளுடன் கண்கொள்ளக் காட்சியாக அமைந்திருப்பது கண்கூடு. அதைவிட மேலாக நீர்த்தாங்கியும், பூசகரின் இல்லிடமும் அமைந்திருக்கின்றது.


உள்ளூர் மக்களின் நிதியைப் பயன்படுத்தி மஹா கும்பாபிஷேகப் பெருவிழா கரவருடம் ஆவணி மாதம் 02.09.2011 அன்று சிறப்பாக நடைபெற்றதை எல்லோரும் கண்ணாரக்கண்டு களித்துள்ளார்கள். நிறைவாக சங்காபிஷேகமானது 25.09.2011 இல் நடைபெறுகிறது. இந்நன்நாளில் நாடிவரும் பக்தப் பெருமக்களுக்கு நல்மனதையும் நற்சிந்தனையையும் ஏனைய செல்வங்களையும் வழங்க எம்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

வ.சின்னத்தம்பி

தலைவர்,

மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானம்

பரிபாலனசபை.



## அடியவர் கொடுவினை தீர்த்து அருள் சுரக்கும் மாணிக்கப்பிள்ளையார்

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்திலுள்ள வடமராட்சியின் சிறப்புறு அல்வாய் வடக்கு அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கோயில் கொண்டு எழுந்தருளி அளப்பரிய கருணையினாலும் அடியவர்களின் உதவியினாலும் ஆலயம் புனரமைக்கப்பட்டு (02.09.2011)ஆவணிமாதம் 16ஆம்நாள் வெள்ளிக்கிழமை புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன நவகுண்டபஷ மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்று 24ஆம் நாள் இன்று 25.09.2011 ஞாயிற்றுக்கிழமை மண்டலாபிஷேகப் பூர்த்தியும் 1008 சங்காபிஷேகமும் சிறப்புற நடைபெறுகின்றது. மாலை எம்பெருமான் கிராம வீதியுலா நடைபெற்று திருவூஞ்சலும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இவ்வாலயம் தோன்றுவதற்கு சிறப்பான வரலாறு ஒன்றுண்டு. இக்கிராமமக்கள் தொன்று தொட்டு விநாயகர் வழிபாட்டில் மிகுந்த பற்றுக்கொண்டதன் காரணமாக பிள்ளையார் கதை விரதம் இவர்களது பக்தி மேம்பாட்டினை எடுத்துக் காட்டியதன் பலனாக பிள்ளையாரே நேரில் தோன்றி பட்டபுளியமரத்தை தளிர்க்கும் எனக்கூறி காட்சி கொடுத்தமையால் பட்டபுளியானே; மாறாம்புலத்தானே என யாவராலும் அழைக்கப்படலானார்.

மேலும் இக்கோயில் ஆவாகணம் செய்யும் விக்கிரகம் இந்தியாவிலிருந்து எடுத்து வரும்போது விக்கிரகம் மறைக்கப்பட்டதாகவும், கொண்டு வந்தவர் பிடிபட்டு கொழும்பு மாறை சிறையில் இருந்ததாகவும் அப்போது எம்மவர் தினமும் மாறாம்புலம் மாறாம்புலம் என அழைப்பதையும் இவரோடு சிறையிலிருந்து அவதானித்த வேதியர் ஒருவர் வினவியவேளை ஐய, எமது குலதெய்வமான பிள்ளையாரை மாறாம்புலம் எனக் குறிப்பிடுவதாகவும் அவ்வேளையில் கூறியபோது அவ்வேதியரும் எம்பெருமான் மீது பேரன்பு கொண்டு திருப்பதிகம் பாடியதாகவும் அடுத்த சில தினங்களில் எமது ஊரவரும் வேதியரும் சிறையிலிருந்து விடுதலை பெற்று இத்திருத்தலத்திற்கு வருகைதந்து எம்பெருமானை வணங்கி பதிகத்தைக் கையளித்தாரென கர்ணபரம்பரைக்கதையாகவும் 1937ஆம் ஆண்டிலே வெளியீடு செய்யப்பட்ட பதிக வரலாற்றுப் புத்தகத்திலும் பதிவாகியுள்ளது. அவ்விக்கிரகமே இன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதை எண்ணி எம்மவர்கள் ஆனந்தப் பரவசமடைகின்றார்கள்.


எமது ஆலயம் இதுவரை காலமும் மூலமூர்த்தியோடு இருந்த ஆலயம் தற்போது மஹாலக்சுமி, முருகன், சண்டேஸ்வரர், வைரவர் போன்ற பரிவாரமூர்த்திகளோடும் மேலும் மணிக்கூட்டுக் கோபுரம், வசந்தமண்டபம், தேவர்சபை, கொடித்தம்பம், மணிமண்டபம், தேர் தரிப்பிடம் போன்ற அமைப்புக்களுடன் மிகவும் அழகாகவும் அருள் சுரக்கும் இடமாகவும் காட்சியளிக்கின்றது.

இவ்வாலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாணிக்கப்பிள்ளையார் தம்மை வழிபடும் அடியார்களின் விக்கினங்களை தீர்த்து வைத்து மேலான சிறப்புக்களை வாரிவழங்கும் வள்ளலாகவும், கருணை வடிவினராகவும் வீற்றிருந்து அருளாட்சி புரிவதனையும் கண்ணாரக் காண்கின்றோம். ஆதலினால் காணுதற்கரிய மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேக நன்நாளில் அடியவர்கள் அனைவரும் பக்தியுடன் மனம், மொழி, மெய்யினால் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவோமாக.

தொகுப்பு :- வே.சிவராஜலிங்கம்,

திருப்பணிப் பொருளாளர், மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபை.

## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுருவாக பொறுப்பேற்று மிகச் சிறப்பாக மஹா கும்பாபிஷேகத்தையும், தொடர்ந்து 24 நாட்கள் நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தியும் 1008 சங்காபிஷேகமும் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் கிடைத்துள்ளது. விநாயகனைத் தொழுவதன் மூலம் சகல வினைகளும் நீங்கி வாழ்வு மிகுந்து வரும். அடியவர்கள் அனைவரும் மாணிக்க விநாயகனைத் தொழுது வினைகள் நீங்கி வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

பிரம்மஸ்ரீ உ.திலகேஸ்வர சர்மா,

ஆலய பிரதமகுரு,

மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானம்.

## ஆலய பரிபாலனசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா 1008 சங்காபிஷேக கிரியை வழிபாட்டோடு சிறப்பாக நடைபெறுகின்றமை மகிழ்வைத்தருகின்றது. அதுமாத்திரமல்லாமல் மாலை எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி எம்மக்களை பரவசமடையச் செய்யும்.

எமது ஆலயத்தின் சிறப்பார்ந்த மஹாகும்பாபிஷேகமும் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகமும் இறையருளால் மிக சிறப்பாக நடந்தேறியுள்ளது. இப்பெரும் கைங்கரியம் நிறைவேற உழைத்த அடியவர்கள் நிறையவே உள்ளார்கள். அவர்கள் அனைவரையும் நன்றி உணர்வோடு வாழ்த்துகின்றோம்.

திருப்பணி வேலைகள் பூர்த்தியடைய உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் நிதியுதவி புரிந்த அன்புள்ளங்கள், கட்டடங்களைக் கட்டி உதவிய அடியவர்கள், கும்பாபிஷேகத்துக்கு நிதியுதவி புரிந்தவர்கள், மண்டலாபிஷேகம் செய்த அடியவர்கள், மகேஸ்வர பூசை செய்த அடியவர்கள், தாகசாந்தி செய்தோர், மேலும் பொருளுதவி புரிந்தோர், மின் இணைப்பு உதவி புரிந்தோர், ஆலய பிரதமகுரு, கும்பாபிஷேகப் பிரதமகுரு, ஏனைய சிவாச்சாரியார்கள், ஆலய கட்டட நிர்மாணிகள், ஆலய அர்ச்சகர், இல்ல கட்டட கலைஞர்கள், இரவு பகலாக எம்மோடு உழைத்த எம்மக்கள், எல்லாவற்றுக்கும் மேலாக பரிபாலனசபை, கும்பாபிஷேக குழு அன்னதான சபை எல்லோருக்கும் செயலாளரின் பலகோடி நன்றிகள். எம்பெருமானின் அருளாசிகள் அனைவரையும் நித்திய சுகத்துக்கு இட்டுச் செல்லும்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க


மா. நவநீதமணி,

செயலாளர், மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார்

தேவஸ்தான பரிபாலன சபை.

# போராட்டத்தை நிறுத்துங்கள்; பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு

## நாடு திரும்பிய சலே பணிப்பு



ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே நேற்று முன்தினம் நாடு திரும்பியது உலக நாடுகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

ஏமன் நாட்டில் 33 ஆண்டாக பதவியில் உள்ள ஜனாதிபதி சலே இராஜினாமா செய்ய கோரி உள்நாட்டு கலவரம் ஏற்பட்டது. கலவரக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

சலேவுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான மக்களும் களத்தில்இறங்கினர். இந் நிலையில் கடந்த ஜுன்மாதம் 3 ஆம் திகதி தலைநகர் சனாவில் உள்ள ஜனாதிபதி மாளிகை மீது நடந்த தாக்குதலில் சலேவுக்கு தீக்காயம் ஏற்பட்டது. அதன்பின் சிகிச்சைக்காக சவுதி அரேபியாவுக்குச் சென்றார்.

ஏமனில் கலவரம் ஏற்பட்டு வரும் நிலையில் திடீரென அவர் நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

இது குறித்து ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் கூறுகையில்,

ஜனாதிபதி சலே உடனடியாக பதவி விலகும் திட்டம் இல்லை. நாடு திரும்பியவுடன் யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார். இப்போதுதான் பிரச்சினையை தீர்க்க பேச்சுவார்த்தை ஒன்றுதான் வழி என்று அவர் தெரி த்துள்ளார் என்றனர்.

ஏமனில் ஜனாதிபதி சலேவிடம் இருந்து அதிகாரத்தை மாற்ற அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் முயற்சி செய்து வருகின்றன. இந்நிலையில் சலே நாடு திரும்பியது மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையில் சனாவில் தொடர்ந்து கலவரக்காரர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் தொடர்ந்து மோதல் நடந்து வருகின்றது. சலேவுக்கு ஆதரவாகவும் எதிர்ப்பார்ப்பாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கே பேரணிகள் நடத்தி வருகின்றனர். இதனால் மோதல் பெரிதாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது . (4-2)

# பாகிஸ்தானின் இறையாண்மையை அமெரிக்கா மதித்து நடக்க வேண்டும்

## சீனா வலியுறுத்தல்

(பீஜிங்)

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தானின் இறையாண்மையை அமெரிக்கா மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று சீனா ஆதரவு குரல் கொடுத்து வருகின்றது. பாகிஸ்தானில் பதுங்கி இருந்த அல்கொய்தா தீவிரவாத தலைவர் ஒசாமாவை அமெரிக்க வீரர்கள் சுட்டுக் கொன்றனர். அதன்பின் அமெரிக்கர்களை குறி வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க அதிகாரிகள் வீரர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடக்கின்றது. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானின் உளவு நிறுவனம் ஐ.எஸ்.ஐ. உதவி வருவதாக அமெரிக்க இராணுவ தளபதி மைக் முல்லன் கடுமையாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் பாகிஸ்தானில் அமெரிக்கா அத்து மீறி நடக்கக்கூடாது.

பாகிஸ்தானின் இறையாண்மை, ஒருமைப்பாட்டை அமெரிக்கா மதிக்க வேண்டும். தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் உலகளவில் பாகிஸ்தான் மிகப் பெரிய தியாகம் செய்துள்ளது. அதை மறந்து விடக்கூடாது.

எனவே சம்பந்தப்பட்ட நாடுகள் மற்ற நாடுகளை மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

சீனாவின் இந்தக் கருத்து பாகிஸ்தானுடனான நெருக்கத்தையும் அமெரிக்காவுக்கு எதிரான போக்கையும் காட்டுவதாக அமெரிக்கா கூறியுள்ளது. (4-2)




# சிகரெட் பிடிப்பதால் ஞாபகமறதி ஏற்படும்

## ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

சிகரெட் பிடிப்பவர்களுக்கு தினசரி நடவடிக்கைகளில் மூன்றில் ஒரு பங்கு ஞாபக மறதி ஏற்படும் என்று தெரியவந்துள்ளது. மது குடிப்பவர்களுக்கு ஞாபக மறதி ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக முன்னர் ஆய்வுகள் தெரிவித்தன.

தற்போது சிகரெட் பிடித்தாலும் ஞாபக மறதி ஏற்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

சிகரெட் பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினை குறித்து டாக்டர் டாம் ஹெபர்னன் தலைமையில் நார்தம்பிரியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த குழு ஆய்வு நடத்தியது. அதற்காக சிகரெட் பிடிப்பவர்கள், அதை நிறுத்தியவர்கள் மற்றும் சிகரெட்டே பிடிக்காதவர்கள் என மூன்று பிரிவாக பிரித்து அவர்களின் நினைவாற்றலை சோதிக்கும் வகையில் பல கேள்விகள் கேட்டனர்.

அதில் ஒரு சிகரெட் பிடிக்காதவர்களைவிட பிடிப்பவர்களுக்கு தினசரி நடவடிக்கைகளில் ஒரு பங்கு ஞாபக மறதி ஏற்படுவது தெரிய வந்தது.

அதாவது நினைவாற்றல் சோதனையில் சிகரெட் பிடிப்பவர்களுக்கு 59 சதவீத ஞாபக சக்தியும் சிகரெட் பிடிப்பதை கைவிட்டவர்களுக்கு 74 சதவீதமும் சிகரெட்டே பிடிக்காதவர்களுக்கு 81 சதவீத ஞாபக சக்தி இருப்பது தெளிவானது.

சிகரெட் பிடிப்பதால் ஞாபகமறதி ஏற்படுவது குறித்து மேற்கொண்ட ஆய்வு புகை பிடித்தலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரத்துக்கு பயனுள்ளதாக இருக்கும்.

சிகரெட் பிடிப்பதை நிறுத்தினால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். ஆனால் நாங்கள் மேற்கொண்ட இந்த ஆய்வு சிகரெட் பிடிப்பதை நிறுத்தினால் நினைவாற்றல் பாதிக்காமல் இருக்கும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது என்று டாம் ஹெபர்னன் தெரிவித்தார். (4-2)

# புற்றுநோயாளர்களுக்கு அல்பா கதிர்வீச்சு மருந்து கண்டுபிடிப்பு

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ஆண்டு காலமாக ரேடியம் கதிர்வீச்சு மூலம் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இது புற்றுநோய்களை உருவாக்கும் செல்களை அழிக்கிறது. இதனால் உடலில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே கதிர்வீச்சு செலுத்தாமல் மருந்து மாத்திரைகள் மூலம் குணப்படுத்த வைத்தியர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் அல்பா கதிர்வீச்சு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை லண்டனில் உள்ள ராயல் மார்ஸ்டன் வைத்தியசாலை வைத்தியர்கள் புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு வழங்கி பரிசோதனை செய்தனர். இந்த மருந்து 922 பேருக்கு வழங்கப்பட்டது.

அதை உட்கொண்டவர்கள் நோயின் தாக்கம் குறைந்து நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்தார்கள். மேலும் இந்த மருந்தினால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. எனவே இந்த மருந்து புற்று நோய்க்கு சிறந்தது என இங்கிலாந்தின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.


இந்த மருந்து கண்டுபிடித்ததன் மூலம் புற்று நோயை முற்றிலும் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என முன்னணி ஆராய்ச்சியாளர் வைத்தியர் கிறிஸ்பார்க்கர் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்து கண்டுபிடிப்பு ஆராய்ச்சி குறிப்புகள் ஐரோப்பிய புற்றுநோய் ஆராய்ச்சி கழகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (4-2)



ரஷ்யா, அர்காங்கெல்ஸில் அந்நாட்டு பிரதமர் விளாடிமர் புடினை (வலது) ஐஸ்லாந்து ஜனாதிபதி உல்பர் கிரிம்சன் சந்தித்து கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.

# யு.ஏ.ஆர்.எஸ்.செய்மதி பூமியில் விழுந்துள்ளது



அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் காலாவதியான 6 தொன் எடையுள்ள யுஏஆர்எஸ் எனும் செய்மதி நேற்று பூமியில் விழுந்துள்ளதாக நாசா அறிவித்துள்ளது. எனினும் எந்த இடத்தில் விழுந்தது என உறுதியாகத் தெரியவில்லை எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க கிழக்குப் பிராந்திய நேரப்படி கடந்த வெள்ளி இரவு 11.45 இற்கும் சனிக்கிழமை அதிகாலை 12.45 மணிக்கும் இடையில் (இலங்கை நேரப்படி சனி காலை 9.15 இற்கும் 10.15 மணிக்கும் இடையில் ) இச்செய்மதி பூமியில் விழும் என நாசா எதிர்வு கூறியிருந்தது.

சராசரி பஸ் அளவிலான இச்செய்மதி 35 அடி நீளமானதாகும். இச்செய்மதியின் தலா 500 கிலோகிராம் எடையுள்ள சுமார் 26 பாகங்கள் பூமியில் விழும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் நாசா தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அச்செய்மதி பூமியில் விழுந்து விட்ட போதிலும் சரியான இடத்தை அறிவதற்காக காத்திருப்பதாக நாசா நேற்று தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டில் 75 தொன் எடையுள்ள ஸ்கைலாப் விண்வெளி நிலையமும் பேக்ஸஸ்-2 எனும் செய்மதியும் பூமியில் விழுந்தபின் விண்வெளியிலிருந்து கட்டுப்பாடின்றி பூமியில் விழும் மிகப் பெரிய பொருள் யுஏஆர்எஸ் செய்மதியாகும்.

2001 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையம் பூமியில் விழுந்தது. எனினும் கட்டுப்பாடுடன் இறக்கப்பட்ட அந் நிலையம் பசுபிக் சமுத்திரத்தில் விழுத்தப் பட்டது. (4-2)

மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## போர் என்றால் சர்வதேச உதவி தேவை தீர்வு என்றால் சர்வதேச உதவி வேண்டாம்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியப்படமாட்டாது என்பது தெட்டத் தெளிவாகிவிட்டது.

இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் அழுத்தம் மிகவும் மந்தமாக இருந்தமையால், இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஏமாற்றுத்தனத்துடன் செயற்பட்டது - செயற்படுகின்றது.

உலகின் சமகால வரலாற்றில் போரின் மிகக் கொடூரமான பாதிப்பை எதிர்கொண்ட ஈழத்தமிழ் இனத்திற்கு சர்வதேசத்தின் ஆதரவும், உதவியும் கிடைக்காமல் போனமைக்கு ஈழத்தமிழ் இனம் அறிவுப் புலமும் ஆளுமைத்திறமும் சர்வதேச தொடர்பும் இராஜதந்திரோபாயமும் கொண்ட அரசியல் தலைமையை கொண்டிருக்காமை காரணம் எனலாம்.

எங்கள் பிரச்சினையை தமிழ் அரசியல் தலைவர்கள் எடுத்துக் கூறுவார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால், அவர்கள் நம்பிய தமிழ் அரசியல் தலைமைகள் அரசாங்கத்தைக் காப்பாற்றும் உள்நோக்கத்துடன் செயற்பட்டன.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இலண்டனுக்குச் சென்று அங்கு உரையாற்றுகையில் போர்க்குற்ற விசாரணை தேவையற்றது என்று கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் போர்க்குற்ற விசாரணை தேவையில்லை எனக் கூறுகையில்,

அமெரிக்காவை, இலண்டனைச் சேர்ந்த எவரும் போர்க்குற்ற விசாரணை தேவையெனக் கூறுவது எங்ஙனம்?

அவ்வாறு ஒருவர் கூறுவாராயின், அவர் சமாதானத்திற்கு விரோதமானவராகவே பார்க்கப்படுவார்.

இந் நிலையில் ஈழத்தமிழர்களின் அவலம் சபையேற முடியாமல் விழுந்து போகிறது.

எங்களவர்கள் எங்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய, இந்த நாட்டின் ஜனாதிபதி ஐ.நா. சபையில் உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வில் சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை என ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போருக்கு சர்வதேசத்தின் உதவி தேவை. விடுதலைப் புலிகளின் வலைப்பின்னலை அறுக்க சர்வதேசம் உதவ வேண்டும். புலிகளின் நிதியை முடக்க சர்வதேசம் ஆதரவு தரவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு சர்வதேசம் ஆகாது; அது உபத்திரவம்; எப்படி நிலைமை?

அவர்கள் மிகவும் நுட்பமாக காய் நகர்த்த எங்கள் பிரதிநிதிகள் எங்களை ஏமாற்றத் தலைப்பட்டு விட்டனர்.

# இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு தனிச்சட்டம் தேவை

(புதுடில்லி)

இலங்கை அகதிகள் விவகாரத்தில் மத்திய அரசு உடனடியாக தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று துவாரகா நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப் பூண்டி அகதிகள் முகாமில் கடந்த 20 ஆண்டுகளாக வசித்துவந்த சந்திரகுமார் (39 வயது) போலி கடவுச்சீட்டு மூலம் இத்தாலிக்கு செல்ல முயன்றபோது டில்லி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். 6 மாதங்கள் திகார் சிறையில் அடைக்கப்பட்டார்.

இலங்கையில் தனக்கு போதிய பாதுகாப்பு இருக்காது என்பதால் நாடு திரும்ப இலங்கை அகதி சந்திரகுமார் மறுப்பு தெரிவித்துவிட்டார். இந்த வழக்கு தொடர்பாக அவர் சார்பில் வழக்குரைஞர் முத்துக்கிருஷ்ணன் ஆஜராகி வாதாடினார். இதில் சந்திரகுமாருக்கு பிணை கிடைத்து கும்மிடிப் பூண்டி அகதிகள் முகாமில் இருக்கிறார்.

ஒன்றரை ஆண்டுகளாக நடைபெற்ற இந்த வழக்கில் துவாரகா மெட்ரொ பாலிட்டின் மாஜிஸ்திரேட் அருள் வர்மா 20 ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

பல ஆண்டுகளாக இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை வெளிநாட்டினர் என்று கருத முடியாது. அகதிகளை வரவேற்கும் இந்தியா அவர்களுக்காக தனிச் சட்டம் இயற்ற முன்வராதது வருந்தத்தக்கது. அவர்களைக் கட்டாயப்படுத்தி நாட்டுக்கு திருப்பி அனுப்பவும் முடியாது. அகதிகளுக்கு தேசிய அளவில் சட்டம் இயற்றுவது அவசியம் என்று இந்திய சட்ட ஆணையமும் தேசிய மனித உரிமை ஆணையமும் வலியுறுத்தியுள்ளன. இதை கருத்தில் கொண்டு அகதிகளுக்கு தனிச் சட்டம் இயற்ற மத்திய அரசு முன்வர வேண்டும் என்று தீர்ப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்ப்பு குறித்து வழக்குரைஞர் முத்துகிருஷ்ணன் கூறியது, திகார் சிறையில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு சட்ட ஆலோசனை கிடைப்பது இல்லை. இதனால் வேறு வழியில்லாமல் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இந்தவழக்கில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு எங்களுக்கு சாதகமாக உள்ளது.

அகதிகள் விவகாரத்தில் மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று சட்ட ரீதியாக போராட உள்ளேன். நீண்ட காலமாக இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும். இந்த தீர்ப்பினால் சிறையில் வாடும் இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட மாட்டார்கள் என்று நம்புவதாக தெரிவித்தார். (4-2)

# சுதுமலையில் இன்று 'அம்பிகை அருளாலே' இறுவெட்டு வெளியீடும்; இசை நிகழ்வும்

நவராத்திரி விரத காலம் 2011 இனை முன்னிட்டு சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகம் வழங்கும் 'அம்பிகை அருளாலே... பாகம்-2' இசை இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று மாலை 5 மணிக்கு சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் கௌரவ விருந்தினராக டான் தொலைக்காட்சிப் பணிப்பாளர் எஸ்.எஸ். குகநாதனும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ. ச.மகேஸ்வரக் குருக்களும் வாழ்த்துரையை பேராசிரியர் க.தேவராஜாவும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் இசையமைப்பாளர் அக்னி மற்றும் பாடகர்கள் ராகுல், ஹேமாம்பிகா உட்பட்ட தென்னிந்திய மற்றும் யாழ்ப்பாண இசைக் கலைஞர்கள் வழங்கும் சிறப்பு இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அம்பாள் விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ந)

# பரமனின் திராட்சைத் தோட்டத்தில் நேரிய பணிசெய்து பிறரது வாழ்க்கையையும் மாண்பையும் பாதுகாப்போம் (மத் 21:28-32)

அனைவருக்கும் விழிப்பூட்டும் வகையில் இயேசு கூறிய அற்புதமான ஓர் உவமையைத் தருகின்றது.அதில் ஒரு தந்தைக்கு பண்பிலும் போக்கிலும் முற்றிலும் மாறுபட்ட இரு புதல்வர்கள் உள்ளனர்.மூத்த மகன் முதலில் தந்தையை மதிக்காமல் பேசுவது போலத் தெரிந்தாலும் பின்னர் தந்தை விருப்பப்படி தோட்டத்திற்குச் சென்று வேலை செய்கிறார். அடுத்த மகனோ முதலில் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது போலக் காட்டிக் கொள்கிறார். உண்மையில் தந்தையின் விருப்பப்படி தோட்டத்திற்குச் சென்று வேலை செய்ய

## பரமபிதா காட்டிய பாதை

அவர் முன்வரவில்லை. இந்த இரு மகன்களும் நடந்து கொண்ட முறையை ஒரு உவமைக்கதையாகக்கூறிய இயேசு நமக்கும் ஒரு பாடம் கற்பிக்கின்றார்.

கடவுளின் திருவுளம் என்னவென்று அறிந்த பிறகும் நாம் அதை நிறைவேற்றாமல் போய்விடுகிறோம்.இது சரியல்ல என்பது இயேசுவின் போதனை. நாம் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவோம் என்று வாயால், மனதால் உறுதி கொள்கிறோம். மனித பலவீனத்தால், ஆர்வக் குறைவால், சோதனைகளின் சோர்வால் தடம்புரண்டு விடுகிறோம். கடவுளின் பணி மனிதரின் துணையோடுதான் நிகழ முடியும். கடவுளின் திட்டத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு சிறப்பிடம் உண்டு. நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட அன்போடு கைவிரித்து ஏற்பவர் நம் கடவுள். அவர் நம்மிடம் கேட்பதெல்லாம் நாம் அவருடைய தோட்டத்தில் வேலைசெய்ய வேண்டும் என்பதே. இத்தோட்டம் திருச்சபையைக் குறிக்கும். இவ்வுலகில் வாழ்கின்ற மக்களைக் குறிக்கும். நாம் அனைவருக்கும் பணியாளராகத் துலங்குவது இன்றும் தேவை.


முதல் வாசகத்தில் அகதிகளாக இருந்து மீண்ட யூதமக்கள் முன்னோரின் பாவங்களுக்காக தலைமுறையினரை இறைவன் தண்டிப்பார் என முழுமையாக நம்பினார்கள். எனவே எசேக்கியல் இறைவாக்கினரூடாக இறைவன் அம்மக்களுக்கு உங்கள் இறைவன் தண்டிக்கின்றவர் அல்ல மன்னிக்கின்றவர்.உங்கள் மேலோட்டமான எண்ணங்களை, கருத்துக்களை மாற்றுங்கள். ஆழமான செயற்பாடு நிறைந்த வாழ்வுக்கு தடையாகயிருக்கும் கருத்துக்களை, எண்ணங்களை உடைத்தெறியுங்கள் என்றுரைக்கின்றார். நற்செய்தியில் மேலோட்டமான வாழ்வுக்கு எடுத்துக் காட்டு இரண்டாவது மகன் என காட்டுகின்றார்.

பற்றில்லாத, பிடிப்பில்லாத , ஈடுபாடில்லாத வாழ்வு, சொல்லளவில் போகிறேன் என்று சொல்லி போகாமல் இருக்கின்ற நிலை, ஆழமான வாழ்வுக்கு எடுத்துக் காட்டு. முதல் மகன் செயலளவில் ஈடுபட்டவன் தன்னை, சிந்தனையை, எண்ணத்தை மாற்றிக் கொண்டவன்.

இன்று எம்மிடையே படிப்பில்லாத இல்லறவாழ்வுக்கு காரணம் கடைப்பிடிக்காத மேலோட்டமான திருமண வாக்குறுதிகளே. திருப்தியில்லா வேலைக்கு காரணம் ஒரே முறையான சிந்தனைகளும் வாடிக்கையாகிப் போன பணிகளுமே சாரமில்லா மறையுரைக்கு காரணம். முன்தயாரிப்பில்லா, யாதார்த்தமில்லா சிந்தனைகளே புதுமையில்லா கருத்துக்களே.

பாவ வாழ்வைத் துறந்து விட்டு கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை முறையை நாம் தழுவ வேண்டும். பிறருக்காக பணி செய்ய வேண்டும். நீங்கள் யாவரும் உங்களை சார்ந்தவற்றில் அல்ல பிறரை சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். (பிலி.2:4). பிறரது வாழ்வும் மாண்பும் பாதுகாக்கப்பட வேண்டும். அதைப் பாதுகாக்கும் பணியே நேரிய வழி.

இந்த நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் தம் உயிரைக் காத்துக் கொள்வர்.(எசே.18:27). இந்த இறையாட்சிக் கொள்கையை ஏற்று வாழ தேவையான மனநிலையே கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலை ஆகும்.



இயேசுவின் மனநிலை தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானவர். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.

ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார் (பிலி.2:7-8).

இறையாட்சிக் கொள்கை, இயேசுவின் மனநிலை ஆகியன தொடர்பாக பல மாந்தர்கள் உள்ளனர். கொள்கை ஏற்பு-செயலேற்பு என நல்மனம் கொண்டவர்களே இவர்கள். நன்மனம் கொண்ட வகையினர் இயேசுவைப் போன்று சிலுவைச் சாவையும் ஏற்கத் துணிகிறவர்கள். முதலில் தயங்கினாலும் செயற்பாட்டிற்கு வந்துவிடுதல் வேண்டும். நாம் விழிப்பாய் இருப்போம். வித்தியாசமாக சிந்திக்க புதுமையாக செயற்பட இறைவனை நாடுவோம்.

நம் செயல்கள் நம் எண்ணங்கள் சொற்களுக்கிசைய அமையுமாறு பார்த்துக் கொள்வோம். அப்போது கடவுளுக்கு நாம் ஏற்புடையவராவோம்.

## கொக்கிளாய், கருநாட்டுக்கேணி பகுதியில்

# மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு

## மக்கள் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கொக்கிளாய் ஆற்றில் தென்னிலங்கை சிங்கள மீனவர்களின் அத்துமீறல்களினால் புளியமுனைக் கிராமத்திலுள்ள தமிழர்கள் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் தெரிவித்துள்ள மக்கள் கடற்றொழிலாளர் சங்கம் தொடர்ந்து மௌனம் சாதித்து வருவதால் ஒருவேளை உணவுக்கும் ஏங்கித் தவிக்கும் நிலையில் தாம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களான கொக்கினாய் கருநாட்டுக்கேணி போன்ற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரம் வரையான குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் பிரதான் வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழில் மேற்படி கொக்கிளாய் ஆற்றிலேயே கடந்த 1984 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் நீண்ட இடைவெளியின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது தொழிலை இந்தப் பகுதியில் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் புல்மோட்டை, உடப்பு போன்ற பகுதிகளில் இருந்து வரும் தென்னிலங்கைச் சிங்கள மீனவர்கள் இந்தப்பகுதியில் தொழில் செய்து வருகின்றனர்.

மேலும் இவர்களால் மிகவும் அபாயகரமானதும் கடல்வளத்தை மிகவும் பாதிக்கக் கூடியதுமான வலைகள் மற்றும் 18 அடி நீளமான அதிகளவு படகுகள் ஆகியவற்றையும் பயன்படுத்துகின்றனர். எனினும் 1982 ஆம் ஆண்டு கொக்கிளாய் ஆற்றிற்கென அமைக்கப்பட்ட யாப்பில் குறிப்பிடப்பட்ட தற்கிணங்க 18 படகுகளை தமிழர்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழர்களிடமிருந்து 5 படகுகளும் ஆற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை பெருங்கடல் தொழிலும் முடக்கப்பட்டுள்ளது. இம்மக்களுக்கு சொந்தமான அனைத்துப் பாடுகளும் தற்போது சிங்கள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் முறைப்பிரகாரம் மயிலிட்டி, உடப்பு, புளியமுனை ஆகிய மூன்று பிரதேச மீனவர்களுக்கு மட்டுமே பெருங்கடலில் தொழில் புரிவதற்கான கடற்றொழில் அனுமதி உள்ளது.

நாங்கள் பெருங்கடல் தொழிலும் செய்ய முடியாமல் ஆற்றுத் தொழிலும் செய்ய முடியாமல் வாழ்வாதார ரீதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதற்கு மேல் கடந்த 6 மாதங்களாக நிவாரணக் கொடுப்பனவுகளும் கூட நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கொக்கிளாய் ஆற்றிற்கு அப்பால் தமிழர்கள் பாரம்பரியமான விவசாயம் செய்து வந்த சின்னக்குளம், கலியாணக்குளம், முந்திரியக்குளம், அக்கரைவெளி மாயாமுனை, எரிஞ்சகாடு, கந்தசாமிமலை, போன்ற தமிழ் கிராமங்களும் அங்கிருந்த விவசாய நிலங்களும் தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (4-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் ஆலயத்தலைவர் வீ.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பொது மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பரிபாலனசபைச் செயலாளர் த.தர்மகுலேந்திரன் தெரிவித்துள்ளார். (4-12)

# இல.அபிவிருத்திக்கு தேவையான உதவிகளை இந்தியா வழங்கும்

## அசோக் கே காந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியா நாடுகளுக்கிடையிலான உறவு மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. பிராந்தியத்தில் இலங்கையின் அபிவிருத்தி குறித்த உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்க காத்திருக்கின்றது. இதன் ஒரு கட்டமாகவே திருகோணமலை சம்பூர் அனல் மின்நிலைய திட்டத்திற்கு இந்தியா ஏழு மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியாக வழங்கியுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக இலங்கை மற்றும் இந்திய கடற்படையினரின் கடற்போர் ஒத்திகை நிகழ்வுகளை திருகோணமலையில் நடத்தியதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு தொடர்பிலான புரிந்துணர்வை வலுப்படுத்த விரும்பியுள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட ஆயிரத்து 200 கணனித் தொகுதிகளை கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ரூபா எழுபது மில்லியன் பெறுமதியான கணனித்தொகுதிகள் வழங்கப்பட்டதுடன் திருகோணமலை கோணேசர்புரி பகுதியில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த ஆயுள்வேத கற்கை பிரிவிற்கு ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான ஆயுள்வேத மருந்து வகைகளும் கையளிக்கப்பட்டன. இதனையடுத்து அனைவர் மத்தியிலும் உரையாடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (4-2)

## தமிழர் விடுதலை கூட்டணியின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த தேசிய மாநாடு இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கௌரவிப்பு, கட்சியின் புதிய நிர்வாகிகள் அறிமுகம், பொதுக் குழுவின் தீர்மானங்கள் மற்றும் அமரர் அமிரின் வரலாற்றின் மனிதன் எனும் நூல் வெளியீடு என்பனவும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து இதர கட்சிப் பிரமுகர்கள் உரையும் கம்பவாரிதி ஜெயராஜாவின் தந்தை செல்வா பற்றிய சிறப்புரையும் இடம்பெறும். இதில் முற்பகல் நிகழ்வுகள் அமரர் தந்தை செல்வாஅரங்கிலும் பிற்பகல் நிகழ்வுகள் அமரர் அமிர் அரங்கிலும் ந்டைபெறும். (4-12)

# மலையகமக்கள் முன்னணி வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி சார்பான பதுளை மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் நோபல் சுரேஸ் நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

பதுளை மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் மாலை பதுளை வெலேகடைபகுதியில் பிரசார கூட்டமொன்று இடம்பெற்றது.

இதன் போது நோபல் சுரேஸ் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதுடன் ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து கட்சி அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பிரசார கூட்டத்தில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ, ஊவாமாகாணசபை உறுப்பினர் கே.வேலாயுதம், முன்னாள் பிரதியமைச்சர் எம்.சச்சிதானந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4-2)

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே , தொழில்புரிவோரே..!

எம்மிடம் HND பயிற்சி நெறியில் இணையும் மாணவர்கள் BUCKS UNIVERSITY-UK இன் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை B.Sc (Hons) in Computing, B.A.(Hons) in Business & Finance ஆகிய துறைகளில் யாழ் மண்ணில் இருந்தவாறே தொடரமுடியும்.

யாரும் இதுவரை வழங்காத சலுகை எம்மிடம் மட்டுமே.

HND
in Computing
in Business (General)
in Business Management
in Business HR
in Business IT
(18 Months)

எமது வழமையான கட்டணம் 201,600/=
But Now...
150,000/=

இச் சலுகை 30/09/2011 வரை மட்டுமே......

(சி/4520)

Esoft Computer Studies.
No.166/3, Navalar Road Jaffna.
TP: 021-2224142

வடமாகாணக்கிளைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Chavakachcheri | 077-6250789 | Uduppiddy | 021-3201303 |
| Nelliyadi | 021-2244940 | Kodikamam | 077-6250789 | Mannar | 023-2223377 |
| Kilinochchi | 021-2285444 | karainagar | 077-3099308 | Vavuniya | 024-2226060 |


நூற்றாண்டை நெருங்கும் நுவலரிதிலகங்கள்

முதுபெரும் புலவர்



வை.க.சிற்றம்பலம்

கலாநிதி



க.வைத்தீஸ்வரக்குருக்கள்

(98) தொண்ணூற்று எட்டுவயதை நிறைவுசெய்த முதுபெரும் புலவர் சிவத்திரு வை.க. சிற்றம்பலம் அவர்களும், (95) தொண்ணூற்றைந்து வயதை நிறைவு செய்த செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்களும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றவும் நாடு நலம்பெறவும் வீடு வளமுறவும் இவ்விரு பெரியார்களின் நல்லாசி வேண்டியும் தில்லைக்கூத்தன் திருவடி வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

க.கு.க.சிவபாலன்,
களபூமி- காரைநகர்,
அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்.

(சி-4531)

# சென்னை அணியை பந்தாடினார் மலிங்க

# மும்பை இந்தியன்ஸ் திரில் வெற்றி

(சென்னை)

மலிங்கவின் அதிரடியில் மும்பை இந்தியன்ஸ் அணி 3.விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது லீக் ஆட்டத்தில் ஏ பிரிவைச் சேர்ந்த மும்பை இந்தியன்ஸ்



அணியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை யிழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹசி 57 பந்துகளில் (8பவுண்டரிகள்,3 சிக்ஸ்சர்கள் உட்பட) 81 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 22 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் அகமெட் 2 விக்கெட்டுக்களையும், மலிங்க, பொலார்ட் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 159 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 15.2 ஓவர்களில் 106 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களை பறிகொடுத்து திணறியது.

எனினும் 9 ஆவது வீரராக களமிறங்கிய லசித் மலிங்கவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 159 ஓட்டங்களை குவித்து 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் லசித் மலிங்க ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 37 ஓட்டங்களையும், பிலிசாட் 28, பொலார்ட் 22, அணித் தலைவர் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 19, ஜேக்கப்ஸ் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அஸ்வின், பிராவோ, ரெய்னா தலா 2 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல் ஒரு விக்கெட்டினையும் வீழத்தினர். இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 2 புள்ளிகளைப் பெற்றது.

## கண்காட்சியில் இன்று காத்தவராயன் கூத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் கலைக்கேசரியும் இணைந்து நடத்தும் யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சியில் கருத்தரங்கு நிகழ்வின் 3 ஆவது பாகம் இன்று நடைபெறவுள்ளது.

கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதியின் 4-வது மாடியில் நடைபெறும் இக் கருத்தரங்கு பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறுகின்றது. இதில் ஆய்வாளர்களால் பயனுள்ள கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் இன்று மாலை 3 மணிக்கு காத்தவராயன் கூத்து நிகழ்வும் நடைபெறவுள்ளதாக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார். (ந-5)

## கொள்ளையரின்...

சம்பவத்தில் இராசலிங்கம் வள்ளியம்மா (வயது 60), இராசலிங்கம் இராஜாராம் (வயது 28) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது யன்னல் கதவினை உடைத்து உள்நுழைந்த ஐந்து பேர் கொண்ட கொள்ளையர் குழுவினாலேயே இச்சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொள்ளையர் குழுவிலிருந்த மூவர் சரளமாகச் சிங்களத்திலும் ஒருவர் கொச்சைத் தமிழிலும் மற்றையவர் தமிழிலும் உரையாடியுள்ளனர்.

வீட்டில் சத்தம் கேட்டு எழுந்த தாயின் நகைகளை அபகரித்த கொள்ளையர் அவரைத் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது கொள்ளையர் ஒருவரை மகன் பிடித்தபோது மற்றைய கொள்ளைக்காரன் அவரின் கையை வாளினால் வெட்டியுள்ளான்.

காயப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ந-6-8)

## ஜனாதிபதி...

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் குறித்தும் ஜனாதிபதி இதன் போது, இந்திய பிரதமரை தெளிவுபடுத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பிலும், இலங்கையில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நுழைவும் அதற்கு இலங்கை அரசு வழங்கியுள்ள அனுமதிகள் தொடர்பிலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மகிந்தவிடம் அவர் சுட்டிக் காட்டியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

## சவேந்திரவுக்கு எதிராக...

பட்டுள்ளதாக ஏ.எவ்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவமனைகள் மற்றும் பாதுகாக்கப் பட்ட இடங்கள் மீது தாக்குதல் நடத்தியது, சரணடைந்த போராளிகளைச் சித்திரவதை செய்தது, நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் ஈடுபட்டது போன்ற குற்றச்சாட்டுகள் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது சுமத்தப் பட்டுள்ளதாகவும் ஏ.எவ்.பி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைப் படைகளிடம் சரணடைந்த பின்னர் சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட கேணல் ரமேஸின் துணைவியார் வத்சலாதேவியும் புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீதான தாக்குதலில் படுகாயமடைந்து மரணமான ஒருவரின் மகன் சீதாராம் சிவம் ஆகியோரே சவேந்திர சில்வாவுக்கு எதிரான வழக்கில் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இது ஒரு குற்றவியல் வழக்கு அல்லவென்றும் சவேந்திர சில்வாவினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் மற்றும் கொடுஞ்செயல்களுக்காக அவரிடமிருந்து நட்டஈடு கோரும் வழக்கு எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பாணை அனுப் பியுள்ளது.

இந்த வழக்கு ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் இலங்கை அரசுக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ந-5)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1975 . 05 . 05



உதிர்வு 2009 . 09 . 25

**அமரர் கந்தசாமி கிருஷ்ணரூபன்**

ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குதடா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மகாத்மா வீதி, பண்டித்தறை,
நெல்லியடி, கரவெட்டி.

-குடும்பத்தினர்

(C-4546)

union assurance
Trust in your tomorrow, today.

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான
**யூனியன் அஷ்யூரன்ஸ் PLC யின்**
யாழ்ப்பாணக் கிளைக்கான
A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான

**வேலைவாய்ப்பு**

வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா?
தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் அடையும் நன்மைகள்

- அதி உயர் வருமானம் உழைக்கும் வசதி
- ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டுச் சுற்றுலாவசதி
- வீடமைப்புக் கடன் வசதி
- மோட்டார் சைக்கிள்/கார் போன்ற வாகன வசதிகள்
- ஒவ்வொரு வருடமும் தங்கப்பதக்கங்களை வெல்லும் அரியவாய்ப்பு
- உயர்தர அறிவுசார் பயிற்சி நெறிகள்





Note:- "விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை"



இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் [illegible]
139, ஸ்ரான்லி வீதி, [illegible]யாணம்.
காலம் :- 28.09.2011 புதன்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
வ.றேமன்-0773688791
க.விமலதீஷன்-0773668829

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

GTV மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

## ஜனாதிபதி மகிந்த மீதான...

பொதுக்குழு என்பது வேறு. ஜெனீவாவில் இருக்கும் ஐ.நா. சபையின் மனிதவுரிமை ஆணையத்தின் செயற்பாடு வேறு. ஐ.நா.சபையின் அங்கமாக மனிதவுரிமை ஆணையம் இருந்தாலும் அந்த ஆணையத்தின் அறிக்கைகளும் முடிபுகளும் ஐ.நா.பொதுக்குழுவில் விவாதிக்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

பெரும்பாலான உறுப்புரிமை நாடுகள் மனிதவுரிமை ஆணையத்தின் அறிக்கை பற்றி விவாதிக்க வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே பொதுக்குழுவில் அந்த விவகாரம் பற்றிய விவாதம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கும்கூட முன்னதாகவே அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

எந்த நாடும் இலங்கைப் பிரச்சினையில் நேரடியாக அக்கறை காட்டாத நிலையில் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனிதவுரிமை மீறல் பற்றியோ அவர்களது மறுவாழ்வு பற்றியோ பிரச்சினை எதுவும் எழுப்பப்படும் சாத்தியமே கிடையாது என்று ஹர்தீப் சிங் பூரி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேசும்போது 95 சதவீதம் தமிழர்கள் சகஜ வாழ்வுக்குத் திரும்பிவிட்டதாகத் தெரிவித்திருப்பதாலும் இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையில் மௌனம் சாதிப்பதாலும் ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாகவோ, இலங்கையில் நடந்த மனிதவுரிமை மீறல் பற்றியோ தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. சபையின் பொதுக்குழு விவாதிக்காது என்று தெரிகிறது என மேலும் தெரிவித்தார் பூரி. (ந-5)

சண் சலூன்
பாடசாலை அருகாமை
கைவேலி, புதுக்குடியிருப்பு
[மீண்டும் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்]
(சி-4514)

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134

ESOFT
உடனடி வேலைவாய்ப்பு
1.விரிவுரையாளர்கள் (Lecturers)
2.போதனாசிரியர்கள் (Instructors)
3.அலுவலக உதவியாளர்கள் (Office Peon)
வெற்றிடங்களுக்கான கிளைகள்
1.கிளிநொச்சி
2.காரைநகர்
3.கொடிகாமம்
4.வவுனியா
உங்கள் சுயவிபரக் கோவையை 27-09-2011 இற்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Human Resources Manager.
Esoft Computer Studies (Pvt) Ltd.
Regional Head Office- North
No.166/3, Navalar Road
Jaffna.

தேவை
அலுவலக பெண் வரவேற்பாளர்
A/L தகைமையுடன்
37, சிவகுருநாதன் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
பிற்பகல் 4 மணிக்கு நேரில் வரவும்.
(612)

தேவை
யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் Northern Central Hospital இற்கு கீழ்காணப்பட்ட பணிகளைச் செய்ய ஒப்பந்தகாரர் தேவை.
01). F&B (உணவு)
02). House Keeping (பராமரிப்பு)
03). Security (பாதுகாப்பு)
மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் (28.09.2011) புதன்கிழமை Northern Central Hospital இற்கு நேரடியாக சமுகம் தரவும். வரமுடியாதவர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
தொடர்புகளுக்கு:
Northern Central Hospital,
342, palaly Road, Jaffna.
T.P.: 0773642408
E.mail: nchjaffna@gmail.com

ICT மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது
சி.சிவசன் எழுதிய
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
கிடைக்கும் இடம்
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை, நெல்லியடி.
(6411)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலேஸ்வரி(கமலா) சிவமணி



காரைநகர் மத்தியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கையும் யாழ்ப்பாணம், ஓட்டுமடம் 315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி சிவமணி கடந்த 20.09.2011 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் நவாலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரியும் காரைநகர் மத்தியைச் சேர்ந்த கிருட்டினர் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருட்டினர் சிவமணி (சைவப்புலவர், ஓய்வு பெற்ற அதிபர்- யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், சமாதான நீதிவான், பிரபல சோதிடர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ரஞ்சன் சிவகலா (பின்லாந்து -உதயன் பத்திரிகையின் முன்னாள் பணியாளர்), ஜெயக்குமார் (ரகு மாஸ்டர்-மெடி குயிக்மென், கொழும்பு), விஜயகுமார் (ராகவன் - CMS (PVT) LTD), திருமதி சசிகலா கேதீஸ்வரன் (சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), திருமதி சித்திரா விஜிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலேஸ்வரன் (கனடா), திருமதி சுகன்ஜா வின்சன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-4536)

Study in Jaffna ! Save your money!
இணையத்தளப்பதிவு,இணையத்தள வடிவமைப்பு, மென்பொருள் வடிவமைப்பு,கணினி வலைப்பின்னல் சேவைகளினை வழங்குவதில் பல வருட அபிமானம் பெற்ற SPEED IT NET நிறுவனத்தில் உயர் தர கணினி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
வேலைவாய்ப்பினை உறுதிசெய்யும் உயர் தர கற்கைநெறிகளான
BIT (Colombo University) Degree(Semester 1-6)
Advanced Diploma in Web Development (HTML/PHP/MySQL/JavaScript/CSS/Ajax/Open Source Applications)
Diploma in Windows Networking / Hardware Engineering
Diploma in Computer Programming (Java or C# or VB.net or VB6 or C++)
மேற்படி கற்கைநெறிகளில் ஒன்றை பயிலும் மாணவர்களுக்கு
பின்வரும் பயிற்சிப்பட்டறை வகுப்புக்களில் இலவசமாக கலந்துகொள்ளும் வாய்ப்பு
# English # Tamil Computing # Pc & Internet Applications # e-Commerce
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டும்! முன்கூட்டிய பதிவுகள் அவசியம்!
வகுப்புக்கள் அனைத்தும் ஒக்டோபர் 1 ம் திகதி முதல்
SPEED IT NET
The Quick way to Online
URL: www.speedit.lk
# Tel: 021 222 8358
0777 563 213
021 567 1058
72/28 Panikkar Lane, off Palaly Road,Thirunelvely Junction Jaffna

வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர் கந்தனை வேண்டுகின்றோம்
இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னனியான நிறுவனம்
World Express Services
உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்
கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2220356
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)
தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15
தொ.பே: 0112520894
கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி,
வைரவ புளியங்குளம்,வவுனியா
தொ.பே: 024 490 3200
E.Mail: Worldexpress.ser@gmail.com
www.worldexpressservices.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.